# அகாப்பே அன்பில் வளருதல்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 11

## பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10 ஆகும். விலை கொடுத்து இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

# முகவுரை

நியாயப்பிரமாணம் முழுமையும் எல்லா தீர்க்கதரிசனங்களும், ஒட்டுமொத்தமாக இரண்டு பிரதான கற்பனைகளில் அடங்கியிருக்கின்றன: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூரு வாயாக, உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக (மத். 22:37–40). அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவிக்கிறார் (ரோம. 13:8). அவர் நம்மில் அன்பாயிருந்தது போல, நாமும் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க வேண்டும் என்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறார் (யோவா. 13:34). எனினும், இந்த அடிப்படை அஸ்திபார கொள்கையான அன்புகூரும் கட்டளையைப் பற்றி, கிறிஸ்தவர் களுக்கு இன்னும் போதிக்காமலிருப்பது வினோதமாக இருக்கிறது.

வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் அன்பின் எல்லா அம்சங்களையும் கண்டு பிடிப்பதும், கிறிஸ்தவத்தின் ஆரம்பமும், நடுவானதும், முடிவானதும் அன்பே என்ற உண்மையில் விசுவாசிகளை நிலைநிறுத்துவதுமே, இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். தேவ அன்பின் சூழ்நிலையில் நாம் வாழ, அசைய மற்றும் சுவாசிக்க வேண்டும்.

இனி நாம் அல்ல, கிறிஸ்துவே நமக்குள் பிழைத்திருக்கிறார்; நாம் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, நம்மில் அன்புகூர்ந்து நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறோம் (கலா. 2:20). அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம் (1 யோவா. 4:19). அவருடைய அன்பினாலே நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம் (ரோம. 8:37). நாம் அவரில் அன்புகூரும்போது, எந்த சூழ்நிலையைக் குறித்தும் பயப்பட தேவையில்லை. ஏனெனில், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு, சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கின்றது (ரோம. 8:28).

நாம் எல்லாரும் கிறிஸ்துவின் அன்பில் வேரூன்றி நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்த வான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய ஆச்சரியமான அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று அறிந்து உணர்ந்துகொள்ளவும் வளருவோமாக (எபே. 3:17–19).

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 1*

# அன்பிற்கான நான்கு கிரேக்க வார்த்தைகள்

அன்பிற்கு நான்கு கிரேக்க வார்த்தைகள் இருக்கின்றன: ஈரோஸ் *(eros),* ஸ்டோர்ஜ் *(storge),* ஃபீலியோ *(phileo)* மற்றும் அகாப்பே *(agape).* புதிய ஏற்பாட்டில் ஃபீலியோ மற்றும் அகாப்பே என்ற வார்த்தைகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்க்கையில் இந்த நான்கு வகையான அன்பின் ஸ்தானத்தை புரிந்துகொள்வது, நமக்கு முக்கியமானது ஆகும். ஒரு சமச்சீரான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ, அன்பின் எல்லா பகுதிகளையும் கையாளக் கற்றுக்கொள்வது நமக்கு அவசியமாகிறது.

### *ஈரோஸை புரிந்துகொள்ளுதல்*

ஈரோஸ் அன்பு என்பது பாலியல் அன்பு ஆகும். நம்முடைய சரீரப்பிரகாரமான வாழ்வின் பகுதிகளில், இது மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட, மிகவும் தவறாய் பயன்படுத்தப் படும், மிகவும் தொட்டு உணரக்கூடிய ஒன்றாகும். கிறிஸ்தவத்தில் மனிதகுல பாலியலைக் குறித்த விஷயத்தில், ஒருபுறமாக அதிகமாக சாய்ந்து ஊசலாடும் நிலையிருக்கிறது. பாலுறவு என்பது, சில ஆதி கிறிஸ்தவர்களால் தீமையானதாகப் பார்க்கப்பட்டது மற்றும் அதன் வேலை வெறும் இனப்பெருக்கத்திற்கு மட்டும் என்று குறைக்கப்பட்டது. இன்னொரு புறம், ஆவிக்குரிய மனிதர்களும் ஸ்திரீகளும் இந்த விஷயத்தில் அமைதியாக இருந்து விடுகின்றனர். அவர்கள் அமைதியின் விளைவு என்னவென்றால், சபை சரித்திரத்தில் உள்ள மிகச்சிறந்த போதகர்கள், இந்த விஷயத்தில் அவர்களின் வெளிப்பாடு என்ன வென்று சொல்லாமல், அநேக மக்களை இருட்டிலே விட்டிருக்கின்றனர்.

இந்த அமைதியின் பரிதாப முடிவு என்னவென்றால், தங்கள் அன்றாட வாழ்வை பாதிக்கக்கூடிய இந்த முக்கியமான பகுதியில், ஒரு தெளிவான போதனை இல்லாமல், கிறிஸ்தவர்கள் தாங்களே அதை கவனித்துக்கொள்ளும்படிக்கு விடப்பட்டார்கள். ஆயினும் வேதம் இந்த விஷயத்தைக் குறித்து அமைதியாய் இருக்கவில்லை. இந்தப் பகுதியில் தோற்றுப் போன தாவீது போன்ற தேவ மனிதர்களைக் குறித்து பதிவு செய்திருக்கிறது (2 சாமு. 11:4). பாலியல் சோதனையில் வெற்றிபெற்ற யோசேப்பைப் போன்ற மனிதர்களை குறித்தும் பதிவு செய்திருக்கிறது (ஆதி. 39:7–12). பாலியல் உறவு என்பது, உண்மை யாகவே தேவனால் ஏற்படுத்தப்பட்டு பரிசுத்தப்படுத்தப்பட்டது (ஆதி. 1:27, 28; எபி. 13:4).

கிறிஸ்தவர்கள் தங்கள் பாலியலை ஏற்றுக்கொண்டு, சமச்சீர்நிலையிலிருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். தீமை என்று பாலுறவை புறக்கணிக்கவும் கூடாது அல்லது வரம்பு மீறி செயல்படவுங்கூடாது. நம்முடைய சரீர அமைப்பில், பாலியல் ஒரு பகுதியே. பாலுறவு என்பது திருமண உடன்படிக்கைக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்று தேவன் நியமித்திருக்கிறார். திருமணத்திற்கு புறம்பான எந்த பாலுறவும், அத்துமீறலும் பாவமும் ஆகும். எனினும், திருமணத்திற்குள் பாலுறவு புனிதமானதாகவும், பரிசுத்தமானதாகவும், இன்பமானதாகவும் கருத்தப்பட வேண்டும். தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்ற உண்மையை சாராள் ஒட்டுக்கேட்டபோது தன் உள்ளத்திலே நகைத்து, "நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டா யிருக்குமோ", என்றாள் (ஆதி. 18:12). அவள் பாலுறவை இன்பம் தரக்கூடிய செயலாகக் கருதினாள். பாலுறவின் தீவிர ஆசையை திருமண உறவின் எல்லைக்குள் நிறைவேற்றிக் கொள்வது சரியானது என்று பவுல் தன்னுடைய எழுத்துக்களில் குறிப்பிடுகிறார் (1 கொரி. 7:9). ('Family Relationships' என்ற குடும்பத் தொடர்களின் முதலாம் தொகுப்பு புத்தகத்தில் இந்த விஷயத்தைக் குறித்து இன்னும் அதிகமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

அதே நேரத்தில், திருமண உறவிற்குள்ளும், பாலுறவையும் சேர்த்து எல்லா சரீர பசி அல்லது விருப்பங்களின் மீதும், ஒரு குறிப்பிட்ட அளவு கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு திருமண உறவில் ஒரு நபர் உபவாசிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் எப்படி ஒரு நபர் பாலுறவுகளிலிருந்து விலகியிருக்க முடியும் என்பதைக் குறித்து பவுல் பேசுகிறார் (1 கொரி. 7:5). இது இருவரின் சம்மதத்தின் பேரில் செய்யப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும்; இல்லாவிட்டால் ஒருவர் பேரில் ஒருவருக்குள்ள சரீர பந்தபாசத்தை இது குறைத்துவிடும் (1 கொரி. 7:3, 4). திருமண தம்பதிகள் சரீரபந்த பாசத்தை முழுமையாக அனுபவிக்கும் ஒரு கருவியாக பாலுறவை தேவன் வடிவமைத் திருந்தாலும், நம்முடைய சரீரத்தின் பாலுணர்வோ அல்லது வேறு எந்த அம்சங்களோ நம்முடைய வாழ்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வைக்கப்படவில்லை. பதிலாக, நமக்குள் இருக்கும் புதிதாய்ப் பிறந்திருக்கும் ஆவி, நம்முடைய ஆத்துமா, சரீரம் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும்.

திருமண உறவுக்கு புறம்பான, எல்லா பாலியல் பேராவல்களும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். பாலியல் காரியங்களை நிர்வகிப்பதும் மற்றும் கட்டுப்படுத்துவதும், அதை நேரடியாக எதிர்ப்பதோ அல்லது முற்றிலும் களைந்து விடும் முயற்சியோ அல்ல. பாவம் இன்னும் சரீரத்தில் வசிக்கிறது என்று பவுல் அறிவித்ததின் அர்த்தம் என்ன வென்றால், பூரணமில்லாத ஸ்தூல சரீரத்தில் நீங்கள் இருக்கும்வரையில், இந்த சரீரத்தின் எல்லா தேவைகளையும் தீவிர ஆசைகளையும் நீங்கள் அனுபவிப்பீர்கள் (ரோம. 7:17–21). அதை நேரடியாக எதிர்க்கவோ அல்லது முற்றிலும் களைந்துவிடவோ முயற்சிப்பதின் மூலம், உண்மையாகவே நாம் அதற்கு அதிக பலத்தையும், ஆற்றலையும் கொடுக்கிறோம். எதற்கு நாம் கவனத்தைக் கொடுக் கிறோமோ, அது இன்னும் அதிக பலமாய் வளர ஆரம்பிக்கும். தவறான சிந்தனைகளை அதற்கு எதிராக போராடுவதன் மூலம் தவிர்த்து விட முயற்சிப் போமானால், உதாரணத்திற்கு அவைகளைக் கடிந்துகொள்ளுதல் மற்றும் அதற்கு எதிராய் பேசுதல்; அது அந்த நிமிடத்திற்கு மட்டும் வேலை செய்யும், ஆனால் உடனடியாகவோ அல்லது தாமதமாகவோ, அதற்கு எதிராக போராட உங்களுடைய பெலன் குறைந்துபோகும். திறவுகோல் என்ன வெனில், நல்ல சிந்தனைகளின் மேல் கவனத்தை பதியவைப்பதின் மூலம், கெட்ட சிந்தனைகள் மறையும். அதேபோல், உங்களுடைய ஆவிக்குள் இருக்கும் மகா பெரிய வருக்கு விட்டுக்கொடுப்பதின் மூலம், நம்முடைய மாம்ச சரீரத்தின் மேல் ஜெயமெடுக்கலாம் (ரோம. 7:22, 25).

### *ஈரோஸைக் கட்டுப்படுத்தும் ஐந்து திறவுகோல்கள்*

பாலியல் பேராவலைக் கட்டுப்படுத்தும் ஐந்து முக்கியமான திறவுகோல்கள் இருக்கின்றன. சரீரத்திற்கு சரியான உடற்பயிற்சி இல்லாதபோது, உயிரியல் சமச்சீர் இடை நிகழ்வுகளான தூக்கம், விழிப்பு, பசி, தாகம் போன்றவைகள் சமச்சீர்நிலையிலிருந்து தவறிவிடும். நாகரீகம் நவீனமயமாக்கப்பட்டது, மனிதகுலத்தை இன்னும் அதிகம் அதிகமாக சரீர சோம்பேறித் தனத்திற்குள்ளாக்கிற்று. உடற்பயிற்சிக்கு மிக நல்லவழி நடைபயிற்சியாகும். தினமும் அரை மணி நேரம் முதல் ஒருமணிநேரம்வரை நடைப்பயிற்சி செய்வது, நம்முடைய சரீரத்திலுள்ள அழுத்தம், பிரயாசம், இறுக்கம் இவைகளிலிருந்து விடுதலைதரும். ஆரோக்கியமான அழுத்தமற்ற சரீரத்தில், பாலியல் பேராவல்கள் சாதாரண நிலையிலேயே இருக்கும். சரீர உடற்பயிற்சி குறைவாக உள்ள மக்களிடத்தில் காணப்படும் மன அழுத்தம், இறுக்கம் முதலியவைகள், தவறான பாலியல் நடவடிக்கைகளால் வெளியேற வகைதேடும். அவர்கள் இந்த இறுக்கத்தை சரீர சாதாரண உடற்பயிற்சியின் மூலம் விடுவிக்கக் கற்றுக்கொள்வார் களானால், அசாதாரணமான பாலியல் பேராவலை அவர்கள் உணரமாட்டார்கள்.

பாலியல் பேராவலைக் கட்டுப்படுத்தும் இரண்டாவது திறவுகோல், பாலியல் இச்சைகளை தூண்டும் புத்தகங்கள், இசை, வானொலி, வீடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தவிர்த்துவிடுவது ஆகும் (2 தீமோ. 2:22). தேவனிடத்தில் தங்கள் பாலியல் பேராவலைக்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கட்டுப்படுத்த தேவனிடம் உதவி கேட்கும் மக்கள், தொடர்ந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்பது, ஒரு விவசாயி களைகளை விதைத்துவிட்டு, பின்பு களைகளிலிருந்து விடுதலைபெற தேவனிடம் ஜெபிப்பதைப் போன்றதாகும். ஒரு பிரச்சனையின் வேரைக் களைய வேண்டுமேயன்றி, காணப்படும் வெறும் அறிகுறிகளை அல்ல.

பாலியல் பேராவலைக் கட்டுப்படுத்தும் மூன்றாவது திறவுகோல், ஆரோக்கியமான கிறிஸ்தவ செயல்களில் நம்முடைய நேரத்தை செலவிடுவது ஆகும். உங்களுடைய திருச்சபையிலுள்ள நிகழ்ச்சிகளில் ஈடுபாடுகொள்ளுங்கள். சோம்பலான ஒரு வாழ்க்கை, சாத்தான் இச்சையை விதைக்கும் ஒரு திறந்த நிலமாகும் (1 தீமோ. 5:11–13; எசே. 16:49). அதிக நேரத்தை வீணாய்போக்கும் கிறிஸ்தவர்கள், தங்கள் மனதில் உலக காரியங்களி னாலும், இச்சையினாலும் சோதிக்கப்படுவார்கள். கர்த்தருடைய சித்தத்தில் நீங்கள் நிறைந் திராவிட்டால், சாத்தான் உங்களை நிறைத்துவிடுவான்.

பாலியல் பேராவலைக் கட்டுப்படுத்தும் நான்காவது திறவுகோல், தேவனுடைய வார்த்தையை தியானிப்பதில் இருக்கிறது (சங். 119:9). தேவனுடைய வார்த்தையை தியானிப்பது, நம்முடைய உடலின் சரீரப்பசிகளின் மேல் ஒரு தாக்கத்தை பெற்றிருக்கிறது. நமது ஆவி மனிதனை நாம் போஷிப்போமானால், நம்முடைய சரீரத்தின் விருப்பங்களை அடக்கி ஆளும் திறமையையும், பெலனையும் ஆவி மனிதன் பெற்றுக்கொள்வான். இது எல்லாவற்றிற்கும் உடனடி–நிவாரணம் அல்ல, நமக்குள் இருக்கும் ஆவியினால், ஆத்துமாவையும் சரீரத்தை யும் முழுவதுமாய்க் கட்டுப்படுத்த, இது படிப்படியான நிரந்தரமான திறவுகோல் ஆகும்.

பாலியல் பேராவலைக் கட்டுப்படுத்தும் ஐந்தாவது திறவுகோல், அந்நியபாஷையில் ஜெபிப்பது ஆகும். நாம் ஆவிக்கேற்றபடி நடப்போமானால், சரீர இச்சைகளை நிறைவேற்றா திருப்போம் (கலா. 5:16). நாம் ஆவியில் நடக்கக் கற்றுக்கொள்ளுமுன், ஆவியில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் (கலா. 5:25). மற்றும் ஆவியில் வாழகற்றுக்கொள்ளுமுன், அந்நிய பாஷையில் ஜெபித்தலாகிய, ஆவியில் ஜெபிப்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும் (1 கொரி. 14:14). நான் அந்நியபாஷையில் நீண்ட நேரம் ஜெபித்து சோதனை செய்து பார்த்திருக்கிறேன். நான் கண்டுபிடித்தது என்னவெனில், நீண்ட நேரம் அந்நிய பாஷையில் ஜெபித்தபின்பு, உங்களுடைய முழு சரீரமும் வெதுவெதுப்பாகவும், இயற்கைக்கப்பாற்பட்ட பிரசன்னத்தினாலும், சமாதானத்தினாலும் முழுவதும் பூரிதமாக்கப்பட்டதாயுமிருக்கும். நம்முடைய மாம்ச சரீரங்களின் எல்லா விருப்பங்களும், பசிகளும் நிறைவேற்றப்பட்டதைப் போன்றும், இளைப்பாறுதலடைந்ததைப் போன்றும் இருக்கும். நாம் கிரியைகளை விட்டொழித்து இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம் என்று வேதம் சொல்வதின் கருத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பித்தேன் (எபி. 4:9–11). அந்நிய பாஷையில் ஜெபிப்பது இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஒரு திறவுகோல் ஆகும் (1 கொரி. 14:21; ஏசா. 28:11, 12). சரீரப் பேராவலின் தீ, பரிசுத்த ஆவியானவரின் பெரிதான தீயினால் சாதுவாக அடக்கப்படுகிறது (1 கொரி. 7:9; அப். 2:3, 4).

முடிவாக ஈரோஸ் என்பது தேவனிடத்திலிருந்து வந்த வெகுமதி என்று காண்கிறோம். பாலியல் அன்பும், சரீர பந்தபாசமும், கணவன் மனைவிக்கிடையே தாராளமாக வெளிப்படுத்தப் பட்டு அனுபவிக்கப்பட வேண்டும். திருமண உறவுக்கு வெளியில் ஈரோஸ் கட்டுப்படுத்தப் பட வேண்டும். சிலருக்குத் திருமணமாகாமல் தனிமையாய் இருக்கும் வரத்தை தேவன் தந்திருக்கும் உண்மை, ஈரோஸை முழுவதும் கட்டுப்படுத்த முடியும் என்பதைக் காட்டுகிறது.

*ஸ்டோர்ஜை விளங்கிக்கொள்ளுதல்*

குடும்ப அங்கத்தினர்களிடையே காட்டப்படும் பந்த பாசத்தையும், அன்பையும் ஸ்டோர்ஜ் குறிக்கிறது. ஒருவகையில் அது குடும்ப அன்பு, குடும்ப பந்தபாசம், குடும்ப விசுவாசம் ஆகும். குடும்ப அலகுகளை, ஒன்றாகவே வேதம் நடத்துகிறது. நோவாவின் குடும்பம், அவனுடைய விசுவாசத்தால் காப்பாற்றப்பட்டது (ஆதி. 6:8; எபி. 11:7). மக்களை முழு குடும்ப அலகுகளாக இரட்சிப்பதே தேவனுடைய நோக்கமாகும் (அப். 16:31). விசுவாசிக்கும்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

பெற்றோர்களால் குழந்தைகள் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள் மற்றும் அவிசுவாசியான வாழ்க்கைப் பங்காளர், விசுவாசியான வாழ்க்கைப் பங்காளரால் பரிசுத்தமாக்கப்படுகிறார் (1 கொரி. 7:14). இந்த வசனம் அவிசுவாசிகளுடன் திருமணம் செய்துகொள்வதையோ, பங்காளத்துவம் வைத்துக்கொள்வதையோ பரிந்துரைக்கவில்லை. மாறாக, குடும்பத்தில் ஒரு அங்கத்தினர் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ள குடும்ப அலகுகளைப் பற்றிப் பேசுகிறது.

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அடிப்படை உண்மையுள்ளவர்களாயும் ஒருவருக் கொருவர் விசுவாசம் உள்ளவர்களாயும் இருக்க வேண்டும். குடும்ப அலகுகளுக்குள்தான் நாம் ஒருவருக்கொருவர் ஒப்புவித்தலையும், ஒருவருடைய அதிகாரத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்தலையும், மன்னிப்பையும், ஏற்றுக்கொள்ளுதலையும், உதவியைப் பகிர்ந்து கொள்வதையும், ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்வதையும், தகவல்களையும், குழு ஊழியம் போன்றவைகளையும் கற்றுக்கொள்கிறோம். தன் சொந்தக்குடும்பத்தை ஒருவன் விசாரியாமற்போனால், அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான் (1 தீமோ. 5:8). தங்கள் பெற்றோரை கவனித்துக்கொள்ளும் பொறுப்பை தவிர்த்துக்கொள்ள, மதத்தை ஒரு சாக்குப்போக்காக அல்லது காரணமாகப் பயன்படுத்தும் மக்களின் தவறை, இயேசு பலமாகக் குறிப்பிட்டுக் காண்பிக்கிறார் (மாற். 7:11, 12). நியாயமான காரியத்தில் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியும் பிள்ளைகள், இந்த பூமியில் நீண்ட நாட்கள் வாழ்வார்கள் (எபே. 6:1–3).

நியாயமான காரியத்தில் கீழ்ப்படியுங்கள் என்று வேதம் சொல்வதை நாம் கவனிப்பது அவசியமாகிறது (எபே. 6:1). ஒரு பெற்றோர், வேதத்திலுள்ள கட்டளைகளுக்கு நேர் எதிராக ஒரு பகுதியில் கீழ்ப்படியச் சொல்வார்களானால், வேதத்திலுள்ள கட்டளைகளே முன்னுரிமை பெறும். எனினும் அது அவர்களை அவமதிக்கும் சத்தமான, பெருமையான, முரட்டாட்ட மான கீழ்ப்படியாமையாய் இருக்கக்கூடாது. நம்முடைய அன்பை அவர்களுக்கு காண்பிக்க வேதாகம முறைகளை நாம் தேடுவதின் மூலம், நாம் இன்னும் அவர்களை கனப்படுத்த முடியும். அவர்களுடைய கட்டளைகள் தேவவார்த்தைக்கு முரண்பாட்டதாய் இருக்கும்போது, நம்முடைய கீழ்ப்படியாமை அன்பு குறைவினாலோ அல்லது அவர்கள்மேல் உள்ள மதிப்புக் குறைவினாலோ அல்ல, மாறாக அது மனசாட்சியினால்தான் என்பதை தெளிவாக அவர்களுக்கு நாம் சொல்ல வேண்டும். எந்தெந்த வழிகளிலெல்லாம் சாத்தியமோ, அந்தந்த வழிகளிலெல்லாம் அவர்களுக்கான ஸ்டோர்ஜ் அன்பை நாம் காண்பிக்க வேண்டும்.

கடைசி நாட்களில் பிசாசின் தாக்குதல்களில் ஒன்று, குடும்ப அலகுகளுக்கு எதிரானது. மனுஷர்கள், பெற்றோருக்கு இன்னுமதிகமாக கீழ்ப்படியாதவர்களாக மாறுவார்கள் (2 தீமோ. 3:2). பரிசுத்த ஆவியானவரின் கடைசி இயக்கங்களில் ஒன்றும், சீர்திருத்தத்தில் ஒன்றும் என்னவென்றால், பெற்றோர்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பெற்றோர்களிடத்திற்கும் திருப்புவது ஆகும் (மல். 4:6). ஒரு சமுதாயத்தின் அடிப்படை கட்டமைப்பை உருவாக்குவதே குடும்ப அலகுகள்தான். குடும்ப அலகுகள் உடைந்து போனால், ஒரு தேசத்தின் சமுதாய கட்டமைப்பே சீர்குலைந்துவிடும்.

பேராசையினாலும் சுயநலத்தினாலும் அநேக குடும்பங்கள் சிதைந்து கிடக்கின்றன என்பது வாழ்வின் உண்மையாகும். எல்லா வீடுகளிலும் ஸ்டோர்ஜ் அன்பு திரும்ப புதுப்பிக்கப் பட வேண்டும். வீட்டிற்குள் பந்த பாசம், அன்பு, ஒருவருக்கொருவர் விசுவாசம் ஆகிய இவைகள் புதுப்பிக்கப்படுவது தேவையாயிருக்கிறது. அதே நேரத்தில் தேவனிடத்தில் காண்பிக்கும் அன்பு, ஸ்டோர்ஜ் அன்பைக் காட்டிலும் மேலான, அதிகமான முன்னுரிமையை எடுத்துக்கொள்ளும் என்பதையும் நாம் புரிந்துகொள்வது நமக்கு அவசியமாகிறது (மத். 10:37; மாற். 3:33–35).

*ஃபிலியோ அன்பை விளங்கிக்கொள்ளுதல்*

இந்த அன்பு ஒரு உறவினால் பிறக்கின்றது, மேலும் அது கொடுப்பது மற்றும் பெற்றுக் கொள்வதின் அனுபவமாகும். மனித உறவுகளின் எல்லா அம்சங்களையும், கணவன்கள்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

மனைவிகளுக்கிடையில், பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு இடையில், சகோதரர் மற்றும் சகோதரிகளுக்கிடையில் ஆகிய யாவற்றையும் சேர்த்து ஃபிலியோ அன்பு நிறைவு செய்கிறது. ஒரு உணர்வுப்பூர்வமான பந்தத்தினால் உருவாக்கும் உறவு இது. ஃபிலியோ என்னும் பதத்திற்கான அதே மூல வார்த்தை ‘முத்தம்’ (ஃபிலீமா) என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (ரோம. 16:16; 1 தெச. 5:26). அதே வார்த்தையின் மற்ற அமைப்புகள், நட்பு (ஃபிலியா) உபசரிப்பு (ஃபிலோஜெனியா) மற்றும் நண்பர்கள் (ஃபிலோஸ்) இவைகளைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது. இது மனிதர்களிடையே பகிர்ந்துகொள்ளப்படக்கூடிய மனித பந்தபாசத்தின் தூய்மையான அமைப்பு ஆகும்.

ஃபீலியோ அன்பு, நம்மேல் காட்டப்படும் தேவ அன்பையும் குறிக்கப் பயன்படுத்தப்படு கிறது. சீஷர்கள் இயேசுவை சிநேகித்தபடியினால் (ஃபிலியோ) பிதாவும் அவர்களை சிநேகிக்கிறார் (ஃபிலியோ) (யோவா. 16:27). ஈரோஸ் அன்பு, சரீரத்தை உள்ளடக்கியது; ஸ்டோர்ஜ் அன்பு சரீர ரத்த சம்பந்தமான உறவுகளை உள்ளடக்கியது; ஆனால் ஃபிலியோ அன்பு ஆத்துமாவை உள்ளடக்கியது. அது இரண்டு அல்லது அதற்குமதிகமான ஆத்துமாக் களை ஒன்றாக இணைப்பது; ஒரே சிந்தை, ஒரே சித்தமாக மற்றும் ஒரே உணர்வாக ஆதித் திருச்சபை ஒரே ஆத்துமாவாக இயங்கினார்கள் (அப். 4:32). ஃபிலியோ அன்பில்லாமல், சபையில் ஒற்றுமை இருக்க முடியாது. சபை ஃபிலியோ அன்பில் விருத்தியடைய வேண்டும் (ரோம. 12:10; எபி. 13:1; 1 பேது. 1:22). ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும்போது உணர்வுகளிலும், மனதிலும், சித்தத்திலும் இணைப்பை ஏற்படுத்த இயலும். மனித அனுபவங்களை ஒன்று சேர்ந்து பகிர்ந்துகொள்ளும் போது, உணர்வுகளில் இணைப்பு ஏற்படுகிறது. ஒரு நபரோடு ஒரு உணர்வுப்பூர்வமான இணைப்பு ஏற்படுகிறது. அந்த நபர்கள் நம்மைப்போல அதே நெருக்கடிகளிலும், தோல்வி களிலும், வெற்றியிலும் ஒன்றாக கடந்து சென்றிருப்பாரானால் அந்த இணைப்பு இன்னும் அதிகமாகும். முகாம்களுக்கு பயணம் சென்று திரும்பும் மக்கள், மிக நெருக்கமாகவும், அதிகமாக ஒன்றாக இணைக்கப்பட்டவர்களாகவும் திரும்பும்போது, இந்த உணர்வுப் பூர்வமான இணைப்பு ஒரு சிறிய அளவில் ஏற்படுகிறது. ஃபிலியோ அன்பு நம்முடைய ஆத்துமாவின் உணர்ச்சி பகுதிகளில் ஏற்படுவதினால், நம்முடைய கண்ணீரையும், சிரிப்பை யும் பகிர்ந்து கொள்பவர்களோடு நாம் நெருக்கமாக இருப்பதாக உணர்கிறோம்.

ஆத்துமாவின் அறிவுப்பூர்வமான இணைப்பு, யோசனைகளை ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்வதின் மூலமும் ஏற்படுகிறது. இது நடைபெறுவதற்கு சிலவகையான கருத்துப் பரிமாற்றம் தேவைப்படுகிறது. சில நேரங்களில் எழுத்துக்கள் மூலமாகவும் மற்றும் வேறு தொடர்புகொள்ளும் வழிகள் மூலமாகவும், அறிவு சார்ந்த மண்டலத்தில் மக்கள் ஒருவரோடு ஒருவர் ஃபிலியோ அன்பின் மூலம் கட்டப்படுகின்றனர். ஒரு ஆக்கியோனை நாம் சரீரப் பிரகாரமாக இதற்கு முன்பு சந்தித்திராவிட்டாலும், அவருடைய கருத்துக்களோடு நாம் ஒத்துப்போகும்போது, அவரோடுகூட ஒரு அன்பின் இணைப்பை நாம் உணருகிறோம். இது அறிவு சார்ந்த மண்டலத்தில் உண்டாகும் ஃபிலியோ இணைப்பாகும். கர்த்தரோடு இருக்கும்படியாக சென்றுவிட்ட அநேக ஆதி கிறிஸ்தவர்களுக்கு, நான் தனிப்பட்ட முறையில் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன். ஏனெனில், அவர்களுடைய எழுத்துக்களும் சாட்சிகளும், என்னுடைய வாழ்வை அநேக வகைகளில் பாதித்திருக்கின்றன. தேவனுடைய கிருபையினால், ஆவிக்குரிய மண்டலத்தில், அவர்களில் சிலரை என் தரிசனங்கள் சிலவற்றில் நான் சந்தித்திருக்கிறேன்.

ஒரே மாதிரியான குறிக்கோள்களுக்காகவும், இலக்குகளுக்காகவும் சேர்ந்து வேலை செய்ய தெரிந்தெடுப்பதின் அடிப்படையில், சித்தத்தில் இணைப்பு ஏற்படுகிறது. ஒரே மாதிரியான இலக்குகளுக்காக நாம் சேர்ந்து வேலை செய்யும்போது, ஒரு குறிப்பிட்டவகையான இணைப்பு ஏற்படுகிறது. சிலநேரங்களில், பொதுவான இலக்கை பகிர்ந்துகொள்ளும் மக்களை நாம் முதல் முறையாக சரீரப்பிரகாரமாக சந்திக்கும்போது, பரஸ்பர இணைப்பு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும், இது ஆத்தும மண்டலத்தில் உண்டாகும் ஃபிலியோ இணைப்பாகும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பொதுவாக ஃபிலியோ அன்பு என்பது ஆத்துமாவின் மூன்று பகுதிகளிலும், பல்வேறு கோணங்களில் உண்டாகும் எல்லா இணைப்புகளும் ஆகும். தாவீதும் யோனத்தானும், ஃபிலியோ அன்பின் ஆழ்ந்த, வளமான உறவைப் பகிர்ந்துகொண்டார்கள் (1 சாமு. 18:3,4; 2 சாமு. 1:26). ஆவிக்குரிய வகையில் அதிகமான சகோதரர்களையும், சகோதரிகளையும், தாய்மார்களையும், பிள்ளைகளையும் பெற்றிருக்கும் அனுபவம் ஃபிலியோ அன்பின் முன்னேற்றமாகும் (மாற். 10:30). நமது இயற்கையான குடும்பத்தினரைப் போல நெருக்கமாக மக்கள் இருப்பதற்கு, தேவன் அவர்கள் இருதயத்தில் வைக்கும் ஃபிலியோ அன்பே காரணம். முழு உலகத்திலுமிருந்து தேவன் எங்களுக்கு தந்து ஆசீர்வதித்த அனேக தாய்மார்கள், தகப்பன்மார்கள், சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

*அகாப்பே அன்பை விளங்கிக்கொள்ளுதல்*

அகாப்பே அன்பு, உயர்ந்த வகை அன்பாகும். மற்ற எல்லா வகை அன்பும், பரஸ்பர பரிமாற்றமும், நியமிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலுமானது. அகாப்பே அன்பு நிபந்தனையற்ற அன்பு. இந்த வகை அன்பையே, தம்முடைய எல்லா விசுவாசிகளும் பகிர்ந்துகொள்ளும்படியாய் தேவன் விரும்புகிறார். நாம் நம்முடைய அன்புடன் ஒன்று, நிபந்தனைகளை இணைத்துக்கொள்கிறோம் அல்லது இணைப்பதில்லை. நம்முடைய அன்புடன் நிபந்தனைகளை நாம் இணைத்துக்கொள்ளுமளவிற்கு நாம் அன்பு கூருவோமானால், நாம் அகாப்பே அன்பினால் அன்புகூருகிறதில்லை. நாம் ஒரு பரிமாற்றத்தையே அளிக்கிறோம், வெகுமதியை அல்ல. உண்மையான அகாப்பே அன்பு, எப்பொழுதும் ஒரு வெகுமதியாகவே இருக்கும், இருக்கவும் வேண்டும்.

தேவன் தம்முடைய அகாப்பே அன்பை நமக்குக் காண்பித்தபோது, நாம் பாவிகளாகவே இருந்தோம் (ரோம. 5:8). அவருடைய வெகுமதியான அன்பிற்கு மாற்றாக, நாம் தேவனுக்கு கொடுக்கக்கூடியது ஒன்றுமேயில்லை. நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்ததின் மூலம், தேவன் நமக்குக்காட்டிய அன்பிற்கு நாம் தகுதியானவர்களும் அல்ல. நாம் விழுந்து போன நிலையில், நம்மை விரும்பத்தக்க காரியம் ஒன்றுமிருந்ததில்லை. ஆனாலும் தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் நம்மில் அன்புகூர்ந்தார் (யோவா. 3:16).

பின்வரும் அத்தியாயங்களில், அகாப்பே அன்பின் அம்சங்களை நாம் அதிகமாகக் காணலாம். பின்வரும் அத்தியாயங்களில் ‘அன்பு’ என்னும் வார்த்தை, எதுவுமே பிரத்தியேக மாக குறிப்பிடப்படாமல் வந்தால், அது அகாப்பே அன்பையே குறிக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## அத்தியாயம் 2

# தேவ அன்பு

தேவனுடைய குணாதிசயங்கள் என்ன என்று மூன்று முறை வேதத்தில் பதிவு செய்யப் பட்டிருக்கிறது: தேவன் பரிசுத்தராயிருக்கிறார், தேவன் ஒளியாய் இருக்கிறார் மற்றும் தேவன் அன்பாக இருக்கிறார் (1 பேது. 1:15; 1 யோவா. 1:5; 4:16). தேவனின் இந்த மூன்று குணாதிசயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. தேவ அன்பு பரிசுத்தமாய் இருக்கிறது மற்றும் முழுவதும் ஒளியாயிருக்கிறது. இந்நாட்களில் மனிதர்கள் அன்பைக் குறித்துப் பேசும்போது, அகாப்பே அன்பை, ஈரோஸ் அன்போடும், ஃபிலியோ அன்போடும் குழப்பிக்கொள்கிறார்கள். அகாப்பே அன்பு பரிசுத்தமானது. அது வேதத்திலுள்ள எல்லா நீதியான கற்பனைகளோடும் இசைந்திருக்கும். தேவன் அன்புகூருவதைப்போல அதே விதத்திலும், அதே கோணத்திலும் நாம் அன்புகூர தகுதியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய அன்பைப் பற்றி விளங்கிக்கொள்வது நமக்கு அவசியமாகிறது.

### *தேவனுடைய அன்பின் மென்மைத்தன்மை*

இந்த வாழ்க்கையில் நம்முடைய எல்லா அனுபவங்களையும் உணரவும், விளங்கிக் கொள்ளவும் கூடிய அளவிற்கு, தேவன் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். இந்த பிரபஞ்சத்தின் நீதியுள்ள கட்டளைகளை கொடுத்தவராய் இருப்பதால், சரியான இடங்களில் நியாயத்தீர்ப்பைக் கொடுக்க வேண்டியவராய் தேவன் இருக்கிறார். எனினும், தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும்போது அவர் இருதயத்தில் மிகுந்தவேதனையோடு அதை செய்கிறார். நோவாவின் நாட்களில், நியாயத்தீர்ப்புக் கொடுக்க வேண்டிய நிலையிலிருந்த பூமியை பார்த்து, தேவன் விசனப்பட்டார் (ஆதி. 6:6).

முழு பிரபஞ்சத்திற்கும் சிருஷ்டிகராகவும் பாதுகாப்பவராகவும் இருப்பதால், தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவர வேண்டியதாய் இருந்தது. மனித சமுதாயத்தில் சட்டத்தை மீறுபவர்களுக்கு தண்டனை இல்லாமலிருந்தால், எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். சட்டமும், ஒழுங்கும் கடைபிடிக்கப்படும்போது மாத்திரமே, ஒரு சமுதாயம் நிலை நிற்க முடியும். சட்டதிட்டங்களில்லாத நிலை, நியாயத்தீர்ப்பில்லாமல் மன்னிக்கப்படுமானால், சமுதாயத்தில் முழுக் கட்டமைப்பும் சீர்கெட்டுவிடும். ஆகவே, தேவன் இந்த பிரபஞ்சத்தை ஆளுகை செய்பவராக தேவைப்படும்போதெல்லாம், நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும் பொறுப் பையுடையவராக இருக்கிறார். எனினும், நியாயத்தீர்ப்பில் தேவன் மகிழ்ச்சியடைவதில்லை. தவறு செய்யும் பிள்ளைகளை ஒழுங்கு படுத்தும்போது, கனத்த இருதயத்தோடு அதை செய்கிறோம் என்பதை பெற்றோராகிய நாமெல்லாரும் அறிவோம். நாம் அதை சந்தோஷத்தோடு செய்வதில்லை. ஆனால் அவர்களின் நன்மைக்கு அது அவசியம் என்பதை நாம் அறிவோம். இதை பல லட்சம் மடங்கு பெருக்கினால், நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரும்போது பிதாவானவர் எப்படி உணர்வார் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளலாம்.

மேலும், தேவன் கோபமாயிருக்கும்போதும் அவருடைய கோபம், அவருடைய வார்த்தை களாலும் கட்டளைகளாலும் ஆளுகை செய்யப்படுகிறது. மனிதர்கள் கோபப்படும்போது, சட்டத்திற்கு புறம்பான காரியங்களைச் செய்கிறார்கள். தேவனுடைய கோபம், அவருடைய வார்த்தையாலும் அவருடைய நீதியுள்ள கட்டளைகளாலும் கட்டுப்படுத்தப்படுகிறது. மோசே இந்த உண்மையை விளங்கியிருந்தான். தேவன் இஸ்ரவேலர்கள் மீது கோபப்பட்டபோது, அவருடைய வாக்குத்தத்த வார்த்தையான ஆபிரகாமின் தேவ உடன்படிக்கையினிடத்தில் முறையிட்டார் (யாத். 32:13). தேவன் தம்முடைய வார்த்தையைக் காப்பார் என்றும் தேவனுடைய இருதயத்தின் ஆழத்தில் இருப்பதையும் மோசே அறிந்திருந்தான். தேவன் தம்முடைய மக்களிடம் மகா மென்மையான அன்பு கொண்டிருக்கிறார் என்பதை தாவீது அறிந்திருந்தான். இஸ்ரவேலர்களை தொகையிட்டதின் மூலம், மீறுதல் செய்து தேவனைக் கோபப்படுத்தியபோது, தேவனுடைய கரத்தினால் நியாயந்தீர்க்கப்படுவதை அவன் தெரிந்து கொண்டான். ஏனெனில், தேவனுடைய இரக்கங்கள் மகாபெரியது என்பதை அவன்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

அறிந்திருந்தான் (2 சாமு. 24:14). கர்த்தரோடு நெருக்கமாக நடந்த தேவமனிதர்கள் எல்லாம், தம்முடைய பிள்ளைகளிடத்தில் தேவன் மிக மென்மையான அன்பை, தன் உள்ளான இருதயத்தில் கொண்டிருந்தார் என்பதை அறிவார்கள்.

1986ஆம் வருடம் ஜனவரி 18ஆம் நாள் காலையில் ஆரம்ப மணிநேரங்களில், மறக்க முடியாத வகையில் தேவனுடைய அன்பை அனுபவித்தேன். ஒரு பந்தைப்போல் வெளிச்சம் என் அறைக்குள் வந்து, எனக்கு எதிராக நின்றது. தேவனுடைய பிரசன்னம் முழு அறை யையும் நிரப்பிற்று. நான், ‘கர்த்தாவே, அது நீர்தான் என்று எனக்குத் தெரியும். நான் உம்மை நேசிக்கிறேன்’ என்று சொல்லுமளவும் அது அப்படியே அசையாமல் இருந்தது. உடனடியாக அந்த பந்தைப் போன்ற வெளிச்சம் பரவி ‘Holiness unto the Lord’ (கர்த்தருக்குப் பரிசுத்தம்) என்னும் நான்கு வார்த்தைகளை அமைத்து, அந்த வெளிச்சத்தினால் உண்டாக்கப்பட்ட அந்த பளிச்சென்ற வார்த்தைகள் என் நெற்றியைத் தொடும் வரை எனக்கு அருகில் வர ஆரம்பித்தது. அந்த வெளிச்சம் என்னைத் தொட்டவுடன், நான் ஆவிக்குரிய உலகிற்கு கொண்டு செல்லப்பட்டேன்.

நான் அந்தரத்தில் ஆகாயத்தில் தொங்கவிடப்பட்டு, இந்த உலகத்தைப் பார்ப்பது போலிருந்தது. நான் தேவனோடு ஒன்றாக இருந்ததுபோல உணர்ந்தேன் – நான் தேவனிலும், தேவன் என்னிலும் இருந்து உலகத்தைப் பார்ப்பதுபோலிருந்தது. என்னுடைய முழு ஆள்தத்து வத்திலும் தேவனுடைய அன்பு திரவமாய் துடித்துக் கொண்டிருந்தது. முதல் முறையாக ஆண்டவர் இந்த உலகத்தைக் குறித்து என்ன உணர்ந்தாரோ, அப்படியே நானும் உணர்ந் தேன். தேவனுடைய சித்தத்தில் இல்லாத ஏதோ ஒன்று இந்த பூமியில் சம்பவிக்கும் ஒவ்வொரு தடவையும், நான் பயங்கரமான துக்கத்தையும் வருத்தத்தையும் உணர்ந்தேன். ஒரு தகைவி லான் குருவி வானத்திலிருந்து விழுந்து மரிப்பதாயிருந்தாலும், அந்த துக்கம் உணரப்பட்டது. எல்லா தீமைகளும் மற்றும் தேவ சித்தத்தில் இல்லாமல் பூமியில் நடைபெறும் காரியங்களும், தேவனுக்கு வருத்தத்தை உண்டாக்கியது. நான் அழுதேன் அழுதேன் மற்றும் இனி அழ முடியாத அளவிற்கு அழுதேன். இந்த உலகத்தில் நடை பெற்றுக்கொண்டிருக்கும் பூரணமற்ற எல்லா செயல்களாலும், தேவன் அனுபவிக்கும் அதிக துக்கத்தையும் வருத்தத்தையும் நான் உணர்ந்ததே இல்லை.

எல்லா காரியங்களும் தேவனுடைய பூரண திட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டு, பரலோகத்தில் தேவனுடைய சித்தம் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படும்போது மட்டுமே, தேவனுடைய துக்கம் நிற்கும். சில வேளைகளில் சுகவீனமான ஒரு நபரை நாம் பார்க்கும்போது, அவருக்காக தேவனுடைய மனதுருக்கத்தை நாம் உணர்கிறோம். இதை கோடி மடங்காக பெருக்கினால், தேவன் இந்த உலகத்திற்காக வைத்திருக்கும் அன்பை நாம் விளங்கிக்கொள்ளலாம். கடைசியாக நான் என் அறைக்குள் வந்தபோது, நான் முன்பு இருந்ததைப்போல இருக்கவில்லை. இந்த உலகத்திற்கான தேவனுடைய இதய துடிப்பை உணர்ந்தேன். இந்த பூமியில் என்னுடைய கடைசி மூச்சிருக்கும்வரை, தேவனுடைய பரி பூரண சித்தத்தை செய்யவும் மற்றும் இந்த பூமியில் கொண்டுவரவும் நாடுவேன்.

### *தேவனுடைய அன்பின் தரிசனம்*

மனித அன்பு, இறந்தகாலம் மற்றும் நிகழ்காலத்தில் ஒரு நபர் அறியப்பட்டதின் அடிப் படையிலேயே இருக்கும். ஆனால், தேவனுடைய அன்போ, நாம் என்னவாக இருக்க முடியும் என்று அவர் நினைக்கிறாரோ, அதன் அடிப்படையிலேயே அது இருக்கும். அதன் விளை வாக, மனித அன்பு வரையறைக்கு உட்டபட்டது மற்றும் அது ஒரு முடிவுக்கு வந்துவிடும். மக்கள் மற்றவர்களை சீக்கிரமாய் கைவிட்டு விடுவார்கள். ஒரு நபரில் எந்த நன்மையையும் அவர்கள் காணாவிட்டால், அந்த நபரை அவர்கள் தள்ளிவிடுவார்கள். அந்த நபர் எப்படி இருக்கிறார் என்பதை மட்டும் அவர்கள் பார்த்து, அதின்படி மதிப்பீடு செய்வார்கள். மற்றவர்களைக் குறித்து என்ன காண்கிறார்களோ, அதன் அடிப்படையிலேயே அவர்கள் உறவும் இருக்கும். சிலவேளைகளில் உறவுகள் நன்றாக இருக்க முடியும். ஆனால், சில விரும்பத்தகாத சம்பவங்கள் நேரிடும்போது, அவர்கள் தங்கள் அன்பையும் நட்பையும் நிறுத்திக்கொள்கிறார்கள்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

மாறாக, தேவனுடைய அன்பு நிரந்தரமானது மற்றும் நித்தியமானது. நாம் என்ன செய்தாலும் அல்லது என்ன நடந்தாலும் அவர் நம்மை அதே அளவிலேயே தொடர்ந்து நேசிக்கிறார். நாம் செய்வதை அவர் ஒருவேளை விரும்பாமலிருக்கலாம், ஆனால் அவர் நம்மை தொடர்ந்து நேசிக்கிறார். பரலோகத்திலோ அல்லது பூலோகத்திலோ உள்ள எதுவும் தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க முடியாது (ரோம. 8:39). அவர் நம்மைத் தொடர்ந்து நேசிப்பதின் காரணம் என்னவெனில், நாம் காணமுடியாவிட்டாலும் அவர் இன்னும் நம்முடைய வாழ்வில் மதிப்பைக் காண்கிறார். நாம் என்னவாக இருக்க முடியும் என்பதை அவர் அறிந்திருக்கிறார், ஏனெனில் அவர்தான் நம்மை சிருஷ்டித்தவர். ஒவ்வொரு வாழ்க்கைக்கும் அவர் ஆச்சரியமான திட்டங்களை வைத்திருக்கிறார். தேவனுடைய அன்பு நம்முடைய எதிர்காலத்தின் அடிப்படையிலிருக்கிறது. ஆனால், மனித அன்போ, இறந்த கால, நிகழ்காலங்களின் அடிப்படையிலேயே இருக்கும்.

நம்முடைய எதிர்காலத்தைக் குறித்த அவருடைய தரிசனத்தின் அடிப்படையில், தேவன் நம்முடைய வாழ்க்கையில் பொறுமையோடு தொடர்ந்து கிரியை செய்துகொண்டிருக்கிறார். பவுல் அப்போஸ்தலனை போன்ற மக்களை அநேக கிறிஸ்தவர்கள் கைவிட்டிருப்பார்கள் (1 தீமோ. 1:13). அவர் மனந்திரும்பினபோது, முதலில் பர்னபாவைத் தவிர யாரும் அவரை நம்பவில்லை (அப். 9:26, 27). சில சுய–நீதி கிறிஸ்தவர்கள் பவுலின்மேல் நியாயத்தீர்ப்பு வரும்படி ஒருவேளை ஜெபித்திருக்கக்கூடும்.

அநேக கிறிஸ்தவர்கள், கோபத்தினாலோ அல்லது பெருமையினாலோ மற்றவர்களைத் திருத்துவார்கள். என்ன தவறு என்று காணும் திறமையே திருத்துவதற்கு போதுமான ஆதாரம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். நாம் மற்ற நபரைத் திருத்தும் முன், அவர் செய்த தவறை மட்டும் பார்க்கக்கூடாது. அவரைப் பற்றிய தேவ திட்டத்தையும் நாம் பார்க்க வேண்டும். நாம் தவறை மட்டுமே பார்ப்போமானால், அந்த நபரின் இறந்த மற்றும் நிகழ் காலத்தை மட்டுமே நாம் பார்க்கிறோம். இது தேவனுடைய அன்பு அல்ல. தேவனுடைய அன்பில் நாம் பிரவாகிக்க, அந்த நபரைப் பற்றிய தேவனுடைய திட்டத்தையும், சித்தத்தையும் பார்க்கும் ஆற்றலுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும்.

இந்தவகையில் நாம் அந்த நபரின் தவறை நிறுத்துவது மட்டுமல்லாமல், அவருக்கான சரியான பாதையில் நாம் அவரை நடத்த முடியும். இது நேர்மறையானது மற்றும் உற்சாகத் தைக் கொண்டு வருகிறது. இது தேவ அன்பின் ஆவியினால் உண்டாகும் உண்மையான திருத்தம் ஆகும். நாம் சத்தியத்தை பேசுகிறவர்களாய் மாத்திரம் இராமல், அன்புடன் சத்தியத்தை பேச வேண்டும் (எபே. 4:15). திருத்தும் வேலை தேவனுடைய அன்பினால் செய்யப்பட வேண்டும். பெருமையினால் அல்லாமல், சாந்தமுள்ள ஆவியினாலும் தாழ்மையி னாலும் நடத்தப்பட வேண்டும் (2 தீமோ. 2:25).

*தேவனின் நிபந்தனையற்ற அன்பு*

தேவனுடைய நிபந்தனையற்ற அன்பினால் அன்புகூரக் கற்றுக்கொள்வது, ஒரு கலை யாகும். நம்முடைய கடந்தகாலத்தின் அதிகமான பயிற்சியும், நம்முடைய வாழ்வில் நாம் பெற்றுக்கொண்ட அதிகமான அன்பும், நிபந்தனையுடன் கூடிய அன்பே. நான் சிறிய பிள்ளையாய் பள்ளியில் இருந்தபோது, என் தந்தை எப்படி தன் அன்பை வெளிப்படுத்துவார் என்று எனக்கு ஞாபகமிருக்கிறது. ஒரு முக்கியமான தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த போது, நான் அந்த தேர்வில் தோற்றுப்போனால், வீட்டை விட்டு வெளியே போய்விட வேண்டும் என்று என் தந்தை கூறினார். நீ தோற்றுப்போனால் நான் இனி உன்னை நேசிக்கமாட்டேன் என்று கூறியதாக எனக்குள்ளே விளங்கிக் கொண்டேன். அது என்னை ஒரு இறுக்கமான நிலையில் வைத்தது – நான் தேர்ச்சியடைய வேண்டும் இல்லாவிட்டால் அதுதான் முடிவு. இது நிபந்தனை அன்பாகும். தோல்வி பயத்தினால் நான் கடினமாக படித்திருந் தேனானால், அது பயத்தினால் உண்டான எதிர்மறையான உற்சாகப்படுத்தும் சக்தியாகும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அவர் மட்டும் அறிந்திருந்தாரானால், வேறு வழியில் நான் நன்றாக படிக்க உதவி செய்திருப்பார். "மகனே, தேர்வில் நீ வெற்றிபெற வேண்டும் என்பதே என் சித்தம் என்பதை நீ அறிய விரும்புகிறேன். நீ வெற்றிபெறுவதே என் விருப்பம். நீ தேர்ச்சியடைய வேண்டும். நீ தோல்வியடைய நான் விரும்பவில்லை. ஆனால் நீ தோல்வியடைந்தாலும், நான் இன்னும் உன்னை நேசிப்பேன் என்பதை நீ அறிய விரும்புகிறேன்", என்று சொல்லியிருப்பார்.

அவர் அப்படி சொல்லியிருந்திருப்பாரானால், நான் தேர்ச்சியடைய இன்னும் அதிகமாக உற்சாகப்படுத்தப்பட்டிருப்பேன். ஏனெனில், நான் அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறேன். அவருடைய அன்பை சம்பாதித்து ஆகவேண்டும் என்ற நோக்கத்தோடு படிக்காமல், எளிதாகப் படித்திருப்பேன். என்ன நடந்தாலும் நான் அன்புகூரப்படுகிறேன். நான் தேர்ச்சியடைய இன்னும் உற்சாகப்படுத்தப்பட்டிருப்பேன். ஆனால், இது இன்னும் அதிக நேர்மறையாக இருந்திருக்கும். இந்நாட்களில் அநேக பெற்றோர் நிபந்தனை அன்பைத்தான் கொடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளிடம் "நீங்கள் நல்லவர்களாயிருந்தால், உங்களை நேசிப்போம்", என்று கூறுகிறார்கள். அவர்கள் கெட்டவர்களாயிருந்தால், அவர்கள் நேசிக்கப்படமாட்டார்கள் என்பதையே அது குறிப்பிடுகிறது.

இப்படிப்பட்ட கூற்றுகள் கண்மூடித்தனமான நிபந்தனை அன்பையே கொடுக்கின்றன. என்ன நடந்தாலும் எல்லா நேரத்திலும் நாம் அவர்களை நேசிக்கிறோம் என்பதை நம் பிள்ளைகளுக்கு, அவர்கள் விளங்கிக்கொள்ளும்படி சொல்லவேண்டும். அவர்களுடைய செய்கைகளின்படி அவர்களை தண்டிக்கவோ அல்லது வெகுமதி கொடுக்கவோ செய்யலாம். ஆனால், அவர்கள் நிபந்தனையற்ற அன்பால் அன்புகூரப்படுவார்கள் என்பதை நாம் தொடர்ச்சியாக அவர்களுக்கு உறுதிசெய்ய வேண்டும். நம்முடைய வாழ்க்கைக்கான தேவ அன்பை வாங்கவோ பரிமாற்றம் செய்யவோ இடமாற்றவோ முடியாது. அவர் நீதியுள்ளவர்களையும், அநீதியுள்ளவர்களையும் தொடர்ந்து நேசிக்கிறார் (மத். 5:45).

தேவன் நம்மை நேசிக்க அவர் எந்த நிபந்தனையையும் வைக்கவில்லை. அவர் நம் ஒவ்வொருவரையும் சமமாய் நேசிக்கிறார். நான் இளம் கிறிஸ்தவனாய் இருந்தபோது, தேவனுக்கு ஒரே விருப்பமான குமாரன் – இயேசுகிறிஸ்து இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நான் கர்த்தருக்குள் வளர்ந்து, அவருடைய வார்த்தையை வாசித்தபோது பிதா இயேசுவில் அன்பாயிருக்கிறதைப் போல, நம்மிலும் அன்பாய் இருக்கிறார் என்பதை, உலகம் தெரிந்துகொள்ளும்படியாக இயேசு ஜெபித்ததை, யோவான் பதினேழாம் அதிகாரத்திலுள்ள வசனத்தில் கண்டேன் (யோவா. 17:23). தேவனுக்கு ஒரே விரும்பமான குமாரன் மாத்திரமில்லை, ஆனால் இயேசு வந்தபோது, அவருடைய சிலாக்கியமான நிலைக்கு நம்மையும் கொண்டுவந்தார் என்பதை அறிந்துகொண்டேன் (எபே. 2:6; ரோம. 8:17). தேவன் இயேசுவை எந்த அளவிற்கு நேசித்தாரோ, அந்த அளவிற்கு நம்மையும் நேசிக்கிறார்.

### *நாம் அவருக்கு பிரியமானவர்கள்*

நமது பரமப்பிதா நம் ஒவ்வொருவரையும் சமமாக நேசித்தாலும், நாம் எப்பொழுதும் அவருடைய அன்பை சமமாக உணர்வதில்லை. மகா விசுவாசத்திலும் கிருபையிலும் நடக்கும் நம்முடைய ஆற்றல், தேவனுடைய அன்பின்மேலுள்ள நம்முடைய நம்பிக்கையின் மகத்துவத்தை சார்ந்திருக்கிறது. அது நாம் தேவனையும், மற்றவர்களையும் நேசிக்கும் நம்முடைய அன்பின் மகத்துவத்தில் முடிவடையும் (1 யோவா. 4:16, 19). இயேசு, இந்த பூமியில் தன்னை மாம்சத்தில் வெளிப்படுத்தினபோது, அவருக்கு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும், மற்ற நூற்றுக்கணக்காண சீஷர்களும், மற்றும் அவரை பின்பற்றும் ஆயிரக்கணக்கானவர்களும் இருந்தனர். அவர் எல்லாரையும் சமமாக நேசித்திருப்பார் என்று நிச்சயித்திருக்கிறேன். ஆனாலும், ஒரே ஒரு சீஷன் மட்டும்தான், தன்னை இயேசு நேசித்த சீஷன் என்று எழுதுகிறார் (யோவா. 13:23; 19:26; 20:2; 21:7, 20, 24).

*இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்* என்று தன்னை அழைத்துக்கொள்ள யோவானுக்கு என்ன உரிமையிருந்தது? இயேசு எல்லாரையும் சமமாக நேசித்தார் என்பது அவனுக்குத் தெரியாதா? உண்மையாகவே இயேசு எல்லா சீஷர்களையும் நேசித்தார். ஆனால், யோவான் *மாத்திரமே* இயேசு தன்னை நேசித்த உண்மையை *<u>பொக்கிஷமாக</u>* நினைத்து, அதை

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தலையாய உணர்விற்கு கொண்டு வந்தார். இயேசுவால் நேசிக்கப்படுவதை விசேஷமான நினைத்தார்; இயேசுவால் நேசிக்கப்படுவதை அபூர்வமானதாக நினைத்தார்; தேவன் அன்பாக இருக்கிறார் என்றும், தேவன் நம்மேல் வைத்த அந்த விசேஷ அன்பின் உருவமே இயேசு என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

*தேவனுடைய அன்பை சம்பாதிக்க பேதுருவின் முயற்சிகள்*

பேதுருவோடு அதை வித்தியாசப்படுத்துங்கள். இயேசுவின் மூலமாக தேவனுடைய அன்பில் *இளைப்பாறிக்கொண்டிருப்பதற்கு* பதிலாக, எப்போதும் இயேசு பாராட்டப்படவும் மதிப்பை உணரவுமே பேதுரு *முயற்சித்துக்கொண்டிருந்தார்.* அந்திரேயா அவரை முன்பதாகவே இயேசுவுக்கு அறிமுகப்படுத்தியிருந்தாலும் (யோவா. 1:40–41), இயேசுவின் அன்பிற்கு தாம் பாத்திரமாயிருக்கவில்லை என்பதை அவர் தொடர்ந்து உணர்ந்தார். இயேசு அவருடைய படகை உபயோகித்து, அற்புதமான மீன்படிப்பை அவருக்குக் கிடைக்கச் செய்தபோது, 'நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப்போக வேண்டும்', என்பதே அவருடைய முதல் வார்த்தைகளாயிருந்தன (லூக். 5:8). ஒருபோதும் தம்முடைய அன்பிலிருந்து நம்மை தள்ளிவிடுகிறவர் தேவன் அல்ல. நாம்தான் நம்முடைய பயத்தினாலும் சந்தேகங்களினாலும் தேவனுடைய அன்பிற்கு நம்மை அடைத்துகொள்கிறோம்.

தனக்கான தேவ அன்பையும், தகுதியற்ற நிலையில் பாராட்டப்படும் தயவையும் பெற்றுக் கொள்வதில், பேதுரு தொடர்ந்து அலசடிப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் தைரியமாக எல்லாவற்றையும் துணிந்து செய்யக்கூடிய வகை நபரும், வேகமாக செயல்படக்கூடியவரு மானவர் (மத். 14:28). இயேசுவை, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட அவர் சித்தமுள்ளவராய் இருந்ததற்கு இயேசு அவரை ஆசீர்வதித்தபோது, அவருக்கான தேவ அன்பில் இளைப்பாறுவதற்கு பதிலாக, இயேசுவைக் கட்டுப்படுத்தவும் இயேசு பாராட்டையும் மதிப்பையும் உணரவுமே பேதுரு *முயற்சிக்க* ஆரம்பித்தார். கடிந்து கொள்ளுதலையும் பெற்றுக்கொண்டார் (மத். 16:23). எல்லாரையும் நேசிக்கும், எல்லாவற்றை யும் அறியும் இயேசு, பேதுரு ஒரு சோதனையை சந்திக்கப் போகிறார் என்றும், அவருக்காக தாம் ஜெபித்ததாகவும் அவர் கூறினபோது, பேதுரு தன்னிலே நம்பிக்கை வைத்தவராய், தாம் இயேசுவுக்காய் மரிக்கவும், சிறைக்குப் போகவும் ஆயத்தமாய் இருப்பதாகவும் பெருமையடித்து கொண்டார் (லூக். 22:33).

நாம் அவருக்கு எதை நிரூபித்துக் காட்டமுடியும் என்பதில் தேவன் ஆர்வமுள்ளவராக இல்லை; மாறாக, நம்முடைய கிறிஸ்தவ – வாழ்க்கையும் – ஊழியமும் நமக்கான தேவனுடைய அன்பின் உணர்வினால் வரும் நம்பிக்கையின் உறுதியில் வருகிறதா அல்லது நம்முடைய சுய– நம்பிக்கையின் உறுதியில் வருகிறதா என்பதிலேயே ஆர்வமுள்ளவராக இருக்கிறார். நம்முடைய ஆற்றல்களிலேயே நாம் நம்பிக்கை உறுதியுள்ளவர்களாக இருப்போமானால், நாம் எப்பொழுதும் தோற்றுப்போவோம். நம்மேலுள்ள தேவனுடைய அன்பின் ஆழமான நிச்சயத்திலிருந்தும், நாம் செய்ய அவர் விரும்புவதை நாம் செய்ய நம்மைத் தகுதியாக்கும் அவருடைய ஆற்றலில் இருந்தும், அந்த நம்பிக்கை வருமானால் மாத்திரமே, நாம் ஜெயிக்க முடியும். அப்படியாக, நமக்குள் இருக்கும் அவருடைய ஆற்றலை நாம் வெளியில் கொண்டு வரமுடியும்.

பேதுரு சோதிக்கப்பட்டு, பரிதாபமாக தோல்வியடைந்து இயேசுவை மறுதலித்தபோதும்; சேவல் கூவினபோதும், கர்த்தர் திரும்பினார். அவருடைய கண்கள் பேதுருவின் கண்களை சந்தித்தன. தான் செய்த எல்லாவற்றிற்கும் பதிலாக, கர்த்தர் அவரை இன்னும் நேசிக்கிறார் என்ற உண்மையினால் பேதுரு மேற்கொள்ளப்பட்டு, மனங்கசந்து அழுதார் (லூக். 22:61–62). கர்த்தருடைய ஜெபமே அவரை இந்த அனுபவத்தின் ஊடாய் தாங்கிற்று, பேதுருவின் சொந்த ஆற்றலல்ல. அவருடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு கர்த்தர் ஜெபித்தார் (லூக். 22:32). எதில் விசுவாசம்? யாரில் விசுவாசம்? அவருக்கான இயேசுவின் அன்பில் விசுவாசம், அது மற்ற எல்லாவற்றிற்குமான விசுவாசத்தில் முடிவடையும்! ஏனென்றால், விசுவாசமானது அன்பிலே சக்தியூட்டப்படுகிறது (கலா. 5:6 – 'கிரியை செய்யும்' என்னும் வார்த்தை 'சக்தியூட்டம்' என்னும் கிரேக்க வார்த்தை).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

இயேசு உயிர்த்தெழுந்தபின்பு, தனது அன்பின்மேல் பேதுருவுக்கிருந்த நம்பிக்கையை திரும்ப சீர்செய்ய இயேசு வகை தேடினார். ஆகவே, அவர் என்னை நேசிக்கிறாயா என்று மூன்று முறை கேட்டார். பேதுருவிடம் இரண்டு முறைகள் 'அகாப்பே' அன்பு இருந்ததா என்று இயேசு கேட்டதற்கு பேதுரு, 'ஃபிலியோ' அன்பை வைத்து பதில் அளித்ததாகவும் கிரேக்க வார்த்தைகள் காட்டுகின்றன. மூன்றாவது முறை இயேசு பேதுருவின் நிலைக்கு கீழே இறங்கி வந்து, அவருக்கு 'ஃபிலியோ' அன்பு இருந்ததா என்று கேட்டார். பேதுரு இன்னும் 'ஃபிலியோ' நிலையிலிருந்து 'அகாப்பே' நிலை அன்புக்கு உயர்ந்து வர தடுமாறினார் (யோவா. 21:15–19). உண்மையாகவே, இயேசுவுக்காக அவர் மரிக்க வேண்டும் என்று இயேசு வெளிப்படுத்தின போது, யோவானுக்கு வித்தியாசமான (அவருடைய மனதில் நல்லதாக இருக்குமோ?) நடத்தப் படும் முறை கிடைக்குமோ என்று கவலைப்பட்டார் (யோவா. 21:18–21). தேவனும் இயேசுவும் யோவானை நேசித்ததைப் போலவே, தன்னையும் நேசிக்கிறார்களா என்பதே, எல்லாவற்றிற்கும் பின்பாக அவர் போராடின போராட்டமாகும். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் பின்பு பேதுரு யோவானோடு நெருக்கமாக வேலைசெய்கிறதைப் பார்க்கிறோம் – தேவன் அவரை யோவானைப் போலவும் மற்ற எல்லாரைப் போலவும் நேசிக்கிறார் என்பதை, அந்தநேரத்தில் அவர் நிச்சயமாக உணர்ந்திருப்பார் (அப். 3:1). நாம் தேவனிடத்தில் அன்புகூறும் ஆற்றல், தேவன் நம்மேல் கூறும் அன்பிற்கு நேர்விகிதத்தில் இருப்பதால் (1 யோவா. 4:19), பேதுருவுக்கு இயேசு வைத்த இந்த சோதனை, அவருக்கான தேவ அன்பைக் குறித்து அவர் நம்பிக்கையாக இருக்கிறாரா என்பதை அறிய வைக்கப்பட்ட கடைசி சோதனையாகும்.

### *கிறிஸ்துவில் தேவன் இவ்வளவாய் நம்மிடம் அன்புகூர்ந்தார்*

பிசாசினுடைய எல்லா கிரியைகளும் மற்றும் எல்லா துன்பங்களும், சோதனைகளும் மற்றும் உபத்திரவங்களும் ஒரே நோக்கத்திற்காகவே வருகின்றன – தேவன் நம்மில் அன்பு கூருகிறாரா என்று நம்மை சந்தேகப்பட வைக்கவே. நம்முடைய எல்லா சந்தேகங்களும் பயங்களும், எப்போதும் ஒரு காரியத்தையே மையமாக வைத்து அமைகிறது – நம்மை விசாரிக்கும் அளவிற்கு தேவன் நம்மிடத்தில் அன்புகூருகிறாரா என்பதே அது. நம்முடைய எல்லா மனித முயற்சிகளும், மாமிச முயற்சிகளும் ஒரே ஒரு காரணத்தின் அடிப்படையி லேயே அமைகிறது. – தேவனுடைய அன்பை சம்பாதிக்க முயற்சி செய்வது அல்லது தேவனால் அன்புகூரப்படும் அளவிற்கு நல்லவர்களாக இருப்பது.

முடிவாக இது நம்முடைய உணர்வில் ஆழமாய் பதியட்டும் – தேவன் நம்மிடத்தில் அன்புகூருகிறார்! அவர் இயேசுவில் அன்புகூர்ந்த அளவிற்கு நம்மிடத்திலும் அன்புகூருகிறார் (யோவா. 17:23). நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கையில் அவர் நம்மில் அன்புகூர்ந்தார் (ரோம. 5:8–11). நாம் *அன்பு* இன்னதென்று *அறிந்து கொள்ளும்படியாக* இயேசு நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நமக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார் (1 யோவா. 3:16). தேவன் உங்களிடத்தில் அன்பாய் இருக்கிறார் என்கிற உங்களின் நம்பிக்கையே, உங்களுடைய அனுதின வாழ்வின் வெற்றிக்கான இரகசியமாகும். தேவன் உங்களிடத்தில் அன்பாய் இருக்கிறார் என்பதே, உங்களுடைய ஊழியத்திலும், தொழிலிலும் உங்களுடைய வெற்றியின் இரகசியம்.

தேவன் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறார் என்பதை அறிந்துகொள்வது, உபத்திரவங்கள், துயரங்கள், சோதனைகள், பஞ்சம், நிர்வாணம், நாசமோசம், மற்றும் பட்டயம் இவைகளை மேற்கொள்ள நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறது (ரோம. 8:35). அது *நம்மில் அன்புகூரு கிறவராலே* நம்மை முற்றிலும் ஜெயம் கொள்ளுகிறவர்களாக்குகிறது. தேவன் நம்மிடத்தில் கூறும் அன்பில் நம்பிக்கை – அவர் மேல் உள்ள வெறும் நம்முடைய அன்பு அல்ல. மரண மானாலும், ஜீவனானாலும் தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும் – நம்மேல் உள்ள தேவ அன்பில் விசுவாச முள்ளவர்களாயிருக்குபோது, நாம் முற்றிலும் ஜெயம் கொள்ளுகிறவர்களாய் மாறுவதை *எதுவும்* தடுத்து நிறுத்த முடியாது (ரோம. 8:37–38). மீதமுள்ள நம்முடைய வாழ்க்கையும் ஊழியமும், நம்மெல்லாருக்காகவுமான மிகப்பெரிய தேவ அன்பின் ஆழம், அகலம், நீளம் மற்றும் உயரத்தை உண்மையாகவே கண்டுபிடிப்பது ஆகும் (எபே. 3:18–21).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

## *அத்தியாயம் 3*

# தேவ அன்பின் வல்லமை

ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும், தேவனுடைய அன்பு நிரப்பத்தக்க ஒரு வெற்றிடம் இருக்கிறது. அன்புகூரப்பட வேண்டும் என்ற தேவையோடு கூட நாம் பிறந்திருக் கிறோம். நம்முடைய வளரும் நிலைகளில், அன்பு நம்மிலிருந்து பறிக்கப்படுமானால், நம்முடைய ஆள்தத்துவங்கள் வினோதமான குணாதிசயங்களை உருவாக்கிவிடும். அநேக மக்கள் தங்கள் குழந்தைப்பருவத்தில், அவர்கள் நல்லவர்கள் அல்ல; அவர்கள் எதற்கும் லாயக்கற்றவர்கள், அவர்கள் அடிப்படையில் அன்புகூரப்பட தகுதியற்றவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் தங்களைக் குறித்த தாழ்வான எண்ணமுடை யவர்களாய், தாழ்வு மனப்பான்மையுடையவர்களாக மாறிவிடுகிறார்கள். மற்றவர்கள், 'தீவிரமான பெருமையான' வாழ்க்கை முறையினால், அன்பையும் கவனத்தையும் பெற முயற்சிக்கிறார்கள். மக்கள் வளர்த்துக்கொண்ட எல்லாவித வினோத நடத்தைகளிலும், அநேகர் அன்பும் கவனமும் தேவைப்படுகிற பெரிய பிரச்சனையின் அறிகுறிகளோடு இருக்கிறார்கள்.

### *தேவ அன்பின் சுகமாக்கும் வல்லமை*

மனித ஆத்துமாவில் உள்ள ஒவ்வொரு பிரச்சனையும், தேவ அன்பின் வெளிப்பாட்டினால் சுகமாக்கப்பட முடியும். தேவ அன்பின் சுகமாக்குதலையும் உண்மையான ஏற்றுக்கொள்ளு தலையும் நாம் அறிந்துகொள்ளாதவரை, நம்முடைய ஆத்துமாக்கள் பூரணமாக செயல்படவோ அல்லது ஸ்திரப்படவோ ஒருக்காலும் முடியாது. நாமெல்லாரும் ஏதாவது ஒருவகையில், நம் ஆத்துமாக்களில் காயப்பட்டிருப்போம். தேவனுடைய அன்பு மாத்திரமே இந்த எல்லா காயங்களையும் கழுவி, நம்மை ஆற்ற முடியும். சில மக்கள் அநேக காயங்களைப் பெற்றிருப்பதால், தேவ அன்பினால் தொடப்பட்டாலொழிய, அவர்களால் திரும்ப சாதாரண வாழ்க்கை வாழ முடியாது.

வாழ்க்கையை மாற்றும் ஆற்றலில் தேவனுடைய அன்பு வல்லமையுள்ளதாய் இருக்கிறது. கடினமாக்கப்பட்ட அநேக குற்றவாளிகள், சிறைவாசத்தினாலும் வாழ்வு மாற்ற முயற்சியினாலும் ஒருபோதும் மாற்றப்படுவதில்லை. ஆயிரக்கணக்கான டாலர்களும், மணிக்கணக்கான வேலைகளும் மற்றும் அதிகமான மறு–கல்வி திட்டங்களும் அவர்களை மறுரூபமாக்குவதில்லை. ஆனால், தேவ அன்பின் தொடுதலினால், குற்றவாளிகளிலிருந்து பரிசுத்தவான்களாக மாறி விடுகிறார்கள். மற்றவர்களை கொலை செய்துகொண்டிருந்த அவர்கள், மற்றவர்களை மதிக்காத அவர்கள், மற்றவர்களை பொக்கிஷமாக கருத ஆரம்பிக்கின்றனர். இது ஏன் நடக்கிறது? உள்ளாக அவர்கள் ஆத்துமா தேவ அன்பினால் சுகமாக்கப்பட்டதினாலேயே இது நடக்கிறது. சமுதாயத்திற்கு எதிராக அவர்கள் பிரதிகிரியை செய்ய வேண்டியதில்லை. கவனத்தை ஈர்க்கவோ ஏற்றுக் கொள்ளப்படவோ முயற்சி செய்ய வேண்டியதும் இல்லை. ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் தாங்கள் அங்கீகரிக்கப்பட்டுவிட்டோம் என்பதை அவர்கள் கண்டுபிடிக்கும்போது, தேவ அன்பு அவர்களை மாற்றுகிறது (எபே. 1:6).

மனித குலத்தின் அநேக வியாதிகள், ஆத்துமாவிலுள்ள பிரச்சனைகளோடு இணைக்கப் பட்டிருக்கின்றன. இயற்கை வைத்தியங்கள் அவர்களை சுகமாக்குவதில்லை; ஆனால் தேவ அன்பின் வல்லமை அவர்கள் ஆத்துமாவின் ஆழத்தில் போய்ச் சேரும்போது, சரீர சுகம் உண்டாகிறது. எனவேதான், சுகமாக்கும் ஊழியம் வெறும் வல்லமையின் வாய்க்காலாக மாத்திரம் இராமல், தேவ அன்பின் வாய்க்காலாகவும் இருக்கிறது. தேவனுடைய சுகமாக்கும் அன்பில் அற்புதங்கள் நடக்கின்றன.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அப்போஸ்தலனாகிய பவுல் பெருமையான, சுயநீதியுள்ள மதவைராக்கியமள்ள ஒரு பரிசேயன். அவர் கிறிஸ்தவர்களை கொடுமையாக உபத்திரவப்படுத்தி சிறைப்படுத்தினார் (அப். 9:1, 2). தேவனுடைய அன்பு அவரைத் தொட்டபின்பு, அவர் ஒரு வித்தியாசமான மனிதராக மாறிவிட்டார். அவர் சுய தியாகம் செய்கிறவராக, கொடுக்கிறவராக மாறி விட்டார். அவர் அடிபட்டார், மிலாறுகளால் அடிக்கப்பட்டார், கல்லெறியுண்டார், கப்பற் சேதத்தில் இருந்தார், மோசங்கள், சிறை தண்டனை, பிரயாசங்கள், வருத்தங்கள், கண் விழிப்புகள், பசி, தாகம், உபவாசங்கள், குளிர் மற்றும் நிர்வாணத்தை கிறிஸ்துவுக்காக அனுபவித்தார் (2 கொரி. 11–23–27). கிறிஸ்துவின் அன்பு இவைகளிலெல்லாம் கடந்து செல்ல, தன்னை நெருக்கி ஏவிற்று என்று அவர் கூறுகிறார் (2 கொரி. 5:14).

தேவ அன்பின் சுகமாக்கும் வல்லமையை நாம் அறியாவிட்டால், நாம் அடைய வேண்டும் என்று தேவன் நியமித்த உயரத்தை, நம்முடைய ஆள்தத்துவங்கள் ஒருபோதும் அடைய முடியாது. இந்த பிரபஞ்சத்தில் மிகப்பெரிய வலிமை, அன்பின் வலிமையாகும் (1 கொரி. 13:13). நிபந்தனையில்லாமல் தேவன் நம்மில் அன்புகூருவதின் நிறைவை அறியும்வரை, நாம் பயத்திலேயே தொடர்ந்து நடப்போம் – புறக்கணிக்கப்படுவோம் என்ற பயம். புறக் கணிக்கப்படுவோம் என்ற பயம் இல்லாவிட்டால், நாம் என்னவாக இருக்க வேண்டும் என்று தேவன் கருதுகிறாரோ, அப்படி நம்மால் இருக்க முடியும். பூரண அன்பு வரும்போது மாத்திரமே, பயம் முழுவதும் புறம்பே தள்ளப்படும் (1 யோவா. 4:18). தேவன் நம் வாழ்க்கை யில் வைத்திருக்கிற பலன்தரும் திறனை பயம் முடக்குகிறது. நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் உண்டாக்கினாரோ அப்படிப்பட்ட நபராயிருக்க, தேவ அன்பினால் விடுதலையாக்கப்படுவோமாக.

### *அன்பு – மிக உயரமான குறிக்கோள்*

மனிதனுடைய ஒவ்வொரு கண்டுபிடிப்பும், அதிகபட்ச பலனில் செயல்பட, நிபந்தனைகள் இருக்கின்றன. ஒரு காரின் மிகச் சிறப்பான இயங்கு திறனுக்கு, காலையில் காரை ஓட்ட ஆரம்பிக்கும்போது, தாழ்வான கியரில் மெதுவாக ஓட்டுவதன் மூலம் காரின் இயந்திரத்தை சூடாக்க வேண்டும். நாம் தொடர்ந்து காரின் இயந்திரத்தை கடுமையாக உபயோகிப்போமா னால், சீக்கிரமாக கார் பழுதாகி தேய்ந்து விடும். கலப்பட பெட்ரோலை கார் இயந்திரத்திற்குள் ஊற்றுவோமானால், காரின் இயந்திரம் நாசமாகிவிடும். தேவன் மனிதனை உண்டாக்கின போது, அவனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தின் எல்லா குணாதிசயங்களையும் அதிகபட்ச பலன்தரும் திறனுக்கு கொண்டுவர, அநுகூலமான நிபந்தனைகளை வைத்திருக்கிறார். மனிதர்கள் அன்பில் செயல்பட உருவாக்கப்பட்டனர்.

அன்பற்ற சிந்தனைகளும் செயல்களும், நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்ய அனுமதிக்கும்போது, நம்முடைய மாமிச சரீரம் சீக்கிரமாக தேய்மான நிலைக்கு வந்துவிடும். அழுத்தத்தினால் சுகவீனங்களுக்கும், வியாதிகளுக்கும் நாம் இலக்காகிவிடுவோம். நாம் வெறுப்பினாலும் கோபத்தினாலும் நிறைந்திருக்கும்போது, நம்முடைய மனது தெளிவாக யோசிக்க முடியாது. விரைவாகக் கற்றுக்கொள்ள மிக சாதகமான சூழ்நிலை, அன்பு, சமாதானம், சந்தோஷ மான சூழ்நிலையே என்று கல்வியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பிள்ளைகள் அன்புகூரப்படும் போது, வேகமாகக் கற்றுக்கொண்டு அதிக அறிவை கிரகித்துக் கொள்ளுகிறார்கள். மந்தமான புத்தியுள்ள குழந்தைகள் அன்பு தாழ்ச்சியின் அறிகுறியாக சில நேரங்களில் இருக்கின்றனர்.

இந்த பூமியில் வாழும் ஒவ்வொருவரும், இலக்குகளையும் குறிக்கோள்களையும் வைத் துள்ளனர். அவர்களில் சிலர் வாழ்க்கையின் கோட்பாடுகளை, உலக இன்பங்களின் மேல் வைத்துள்ளனர். மற்றவர்கள் செல்வத்தின் மீதோ அல்லது புகழின் மீதோ வைத்துள்ளனர். இவர்கள் எல்லாரும் வாழ்க்கையின் முழு திருப்தியையும் பெற்றுக்கொள்ள முடியாது. தேவனிடத்திலும், மனிதரிடத்திலும் அன்புகூருவதை தங்கள் வாழ்க்கையின் கொள்கை களாய் வைப்பவர்கள் மாத்திரமே, இந்த வாழ்க்கையில் நிறைவை அடைய முடியும். இவை கள்தான் எல்லாவற்றிலும் பிரதான கற்பனைகள் என்று இயேசு கூறினார் (மத். 22:37–40). தேவனிடத்தில் அன்புகூரவும் மற்றும் எல்லா மனிதர்களிடத்திலும் அன்புகூரவும், நம்முடைய வாழ்க்கையின் கொள்கைகளை வைக்க வேண்டும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இந்தக் கற்பனைகளை கடைபிடிக்க மாத்திரம் இயேசு நமக்குச் சொல்லாமல், பரிசேயர் களிடம் இதைக்குறித்துப் பேசும்போது, இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார் (மத். 22:40). இந்த இரண்டு கற்பனை களையும் வித்தியாசமான வெளிச்சத்தில் கொண்டுவர அவர் வந்தார். அவர்களில் இயேசு அன்பாயிருந்தது போல, அவர்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று, அவர் தம்முடைய சீஷர்களிடம் சொன்னார் (யோவா. 13:34). புதிய உடன்படிக்கையில், நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும் என்று மாத்திரம் சொல்லாமல், இயேசு நம்மில் அன்புகூர்ந்ததைப்போல, மற்றவர்களிடத்தில் அன்புகூர, இயேசு நமக்குச் சொல்லியிருக்கிறார். இது ஒருவரிடத்தில் மற்றவர் பிறனை நேசிக்கும் அன்பிற்கு மேலாக, ஒருவருக்காக ஒருவர் தங்கள் ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாயிருப்பதைக் குறிக்கிறது (1 யோவா. 3:16).

தங்கள் சகோதரருக்காக தங்கள் ஜீவனைக் கொடுக்க முடியும் என்று அநேக கிறிஸ்தவர்களால் நேர்மையாக சொல்ல இயலும் என்று நான் நினைக்கவில்லை. மற்றவர் களுக்காக ஜீவனைக் கொடுப்பதாக நினைத்து, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வைக் கட்டுவதிலேயே அலுவலாயிருக்கிறோம். எனினும் இந்தப் பகுதியில்தான், ஒரு மனிதன் தேவனுக்காக ஜீவனை இழக்காவிட்டால் அதைக் கண்டுபிடிக்க மாட்டான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத். 16:25). நம்முடைய நோக்கங்களும் இலக்குகளும், நம்முடைய சகமனிதரின் முன்னேற்றத்திற்காக இராமற்போனால், தேவனுடைய சித்தத்தில் நம்முடைய இடத்தை நம்மால் கண்டுபிடிக்க இயலாது. ஒவ்வொரு மனித வாழ்விற்குமான தேவசித்தம், எப்பொழுதும் ஒவ்வொருவருடைய நன்மைக்காகவே இருக்கும். நம் ஒவ்வொருவரிடமும் காண்பிக்கப்பட்ட தேவனுடைய அன்பு இதுவாகும். தேவன் தம்முடைய ஒவ்வொரு சிருஷ்டிக்கும் வைத்துள்ள இலக்குகளை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அதே தேவ அன்பு நம்முடைய வாழ்வில் ஊடுருவ வேண்டும்.

*அவருடைய பிரசன்னத்தின் வல்லமை*

தேவன் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துமுன்பே, தம்முடைய அன்பை வெளிப் படுத்தினார். எவ்வளவாய் தேவன் இந்த உலகத்தில் அன்புகூர்ந்து, தம்முடைய ஒரேபேரான குமாரனைத் தந்தது எப்படி என்று வேதம் கூறுகிறது (யோவா. 3:16). இயேசு வந்தபோது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் வியாதியஸ்தர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும் சுகமாக்கினதின் மூலம், தேவனுடைய அன்பை செயல் முறையில் நிரூபித்துக் காட்டினார். அவருடைய வல்லமையின் செயல்பாடுகளக்குப் பின்னால், தேவ அன்பின் இதயத்துடிப்பு இருந்தது. தேவனுடைய அன்பை, தேவனுடைய வல்லமை பின்தொடர்கிறது. மாறாக அல்ல. அதாவது தேவ வல்லமையை தேவ அன்பு பின் தொடராது.

தேவன் தம்முடைய பிரசன்னத்தை வெளிப்படுத்தும்போதெல்லாம், அது அவருடைய அன்பின் பிரசன்னமாகவே எப்போதும் இருக்கும், ஏனெனில் தேவன் அன்பாக இருக்கிறார். தேவ அன்பின் நிறைவு, தேவ பிரசன்னம் மற்றும் வல்லமையின் நிறைவாக இருக்கும். நாம் தேவனுடைய அன்பினால் நிரப்பப்படும்போதெல்லாம், நாம் தேவ பிரசன்னத்தினால் நிரப்பப்படுகிறோம் (எபே. 3:17–19). அவருடைய பிரசன்னத்தில் அவரது வல்லமை, செயல்முறை நிரூபணமாகிறது. தேவனுடைய அன்பு பலவீனமானது அல்ல, அது எல்லா வல்லமையாலும் நிறைந்துள்ளது.

தேவனுடைய அன்பினால் சிருஷ்டிகள் உருவாக்கப்பட்டதினால், நாம் நம்முடைய வாழ்கையை போதுமான அளவிற்கு தேவனுடைய அன்பினால் வாழ வேண்டும். நாம் தேவனுடைய அன்பில் நடக்கும்போதெல்லாம், நம்முடைய சரீரம் ஆவி ஆத்துமா எல்லாம் போதுமான அளவிற்கு செயல்படும். தேவனுடைய அன்பில் நாம் நடக்கும்போது, நாம் ஆரோக்கியமாகவும் செல்வ செழிப்பாகவும் இருப்போம். தேவனுடைய அன்பின் நிறைவை நாம் அனுபவிக்கும்போது மட்டும்தான், அவருடைய வல்லமையின் நிறைவை நாம் அனுபவிக்க இயலும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

### *அத்தியாயம் 4*

# தேவனுடைய அன்பை விளங்கிக்கொள்ளுதல்

கலாத்தியரில் பட்டியலிடப்பட்ட, பரிசுத்த ஆவியானாவரின் எல்லா கனிகளையும் தேவ அன்பு சூழ்ந்துள்ளது. ஒவ்வொரு கனியும், அன்பின் ஒரு அம்சத்தின் விளைவே ஆகும். அவைகளைக் கீழே உள்ளபடி ஒப்பிட முடியும்:

| ***தேவ அன்பு* (1 *கொரி*. 13)** | ***ஆவியானவரின் கனி* (*கலா*. 5)** |
|---|---|
| **1.** தேவனுடைய அன்பு | **1.** அன்பின் கனி |
| **2.** அநியாயத்தில் களிகூராமல் சத்தியத்தில் களிகூரும் | **2.** மகிழ்ச்சியின் கனி |
| **3.** பொறாமையில்லை, தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது | **3.** சமாதானத்தின் கனி |
| **4.** நீடிய சாந்தமுள்ளது | **4.** நீடிய பொறுமையின் கனி |
| **5.** தயவுள்ளது | **5.** தயவின் கனி |
| **6.** தீங்கு நினையாது | **6.** நற்குணத்தின் கனி |
| **7.** சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் | **7.** விசுவாசத்தின் கனி |
| **8.** அயோக்கியமானதை செய்யாது | **8.** சாந்தத்தின் கனி |
| **9.** தற்பொழிவை நாடாது, சினமடையாது | **9.** இச்சையடக்கத்தின் கனி |

ஆவியானவரின் கனி அன்பின் கனியாகும். அது தேவ அன்பின் பலவேறு முகங்கள் ஆகும். ஒன்று கொரிந்தியர் பதின்மூன்றாம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரின் கனிகள் என்ன செய்யும் என்று, அதிக விரிவாக பவுல் விளக்கியுள்ளார். உதாரணத்திற்கு, மகிழ்ச்சியை விவரிக்கையில், மகிழ்ச்சி தீமையில் பங்குகொள்ளாது அதில் சந்தோஷமும் அடையாது ஆனால் சத்தியம் நிலைநிறுத்தப்படும்போது அதைக் கொண்டாடும் என்று கூறுகிறார். தேவனுடைய அன்பு, நாம் சிந்திக்கும் விதத்தையும் கூட பாதிக்க வேண்டும். மக்களைப்பற்றி நாம் உணரும் விதத்தை மாற்றுவது மட்டும்தான் தேவ அன்பு என்று சில மக்கள் எண்ணங்கொண்டுள்ளனர். எனினும் அன்பு தீங்கு நினையாது என்று பவுல் கூறுகிறார் (1 கொரி. 13:5). மற்றவர்களுக்கு எதிராக தீமையான எண்ணங்களை நம் இருதயத்தில் நாம் நிலைநிறுத்திக்கொள்ளும்வரை, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய அன்பை முழுவதுமாக பயிற்சிக்க முடியாது. நம்மைப்பற்றிய தேவனுடைய எண்ணங்கள் தீமையானவைகள் அல்ல, ஆனால் நல்லவைகள் (எரே. 29:11).

நாம் எப்பொழுதுமே மற்றவர்களைப் பற்றி நல்லெண்ணம் உடையவர்களாயிருக்க வேண்டும். நாம் போகுமிடமெல்லாம், அன்பான எண்ணங்களை மக்களுக்குப் பெரிதுபடுத்தி காண்பிக்க வேண்டும். தேவனுடைய கண்கொண்டு மக்களை பார்ப்பதின் மூலமே, இது சாத்தியமாகும். தேவன் பார்ப்பதுபோல் மக்களைப் பார்க்க வேண்டும். இயேசுகிறிஸ்துவிலுள்ள இரட்சிப்பின் சத்தியம், இருமடி வெளிப்பாட்டைக் கொண்டு வர வேண்டும். தேவனை நம்முடைய தகப்பனாகவும், நம்முடைய நித்திய காதலராகவும் காணும் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, நம்முடைய சக மனிதர்களைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்வோம். எல்லா மனிதர்களையும் தேவ அன்பின் கண்களோடு, சுவிசேஷத்தின் மூலமாகக் காணவேண்டும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*அன்பினால் வழிநடத்தப்படுதல்*

கலாத்தியருக்கு ஆவியின் கனியைக் குறித்து பவுல் போதிக்கும்போது, பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவது எப்படி என்று காண்பிப்பதே அவர் நோக்கமாகும். பரிசுத்த ஆவியானவரோடு நடப்பது மற்றும் அவரால் வழிநடத்தப்படுவது எப்படி என்று அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார் (கலா. 5:16, 18, 25). இந்த சூழலில் தான், ஆவியானவரின் கனிகளைப் பற்றி அவர் அவர்களுக்குப் போதிக்கிறார். பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவதற்கும், தேவ அன்பினால் வழிநடத்தப்படுவதற்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவதென்பது அன்பினால் நடத்தப் படுவதே.

இயேசுவின் சுகமாக்கும் ஊழியத்தை வேதம் பதிவு செய்த அநேக தடவைகள், அவர் அவர்கள்மேல் மனதுருகினார் என்று குறிப்பிடுகின்றது (மத். 9:36; 14:14; 18:27). நாம் ஏதேனும் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்பும்போதெல்லாம், அவர் எப்பொழுதும் நம்முடைய இருதயத்தை தம்மடைய அன்பினால் நிரப்புகிறார். பரிசுத்த ஆவியானவரின் எல்லா நடத்துதல்களும், நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்ட தேவ அன்பின் அனுபவத்தோடு இணைந்தே எப்பொழுதும் வரும். தேவனுடைய எல்லா கிரியைகளும், எப்பொழுதும் அவருடைய சுபாவத்தோடு இணைந்தே வரும்; அவருடைய சுபாவம் அன்பே. இதன் மூலம் நாம் தேவனுடையது எது மற்றும் தேவனல்லாதது எது என்பதைப் பகுத்தறியலாம்.

ஆம்ப்ளிபைய்ட் வேதாகமம் கொலோசெயரில் 'தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் நடுவராக இருக்கக்கடவது' என்று மொழிபெயர்க்கிறது (கொலோ. 3:15). நடுவர் என்பவர் இரண்டு கூட்டத்திற்கிடையே தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் பெற்றவர். நாம் ஆவிக்ள்ளாக இருக்கிறோமா அல்லது மாம்சத்திற்குள்ளாக இருக்கிறோமா என்பதை நிதானித்து அறிய, தேவ சமாதானம் உதவுகிறது. மேலே பார்த்தபடி, தேவ சமாதானம் என்பது தேவ அன்பின் ஒரு அம்சம் ஆகும். தேவனுடைய பரிபூரண சித்தத்தின் நிறைவில் நடக்கும்படியாக, நம்முடைய இருதயங்களில் தேவ அன்பு கிரியை செய்வதை விளங்கிக்கொள்ள, ஒவ்வொரு கிறிஸ்தவனும் கற்றக்கொள்ள வேண்டும்.

*விசுவாசத்தின் மூலம் அன்புகூருவது*

நாம் மறுபடியும் பிறக்கும்போது, நம்முடைய இருதயங்களில் தேவ அன்பு ஊற்றப்படுகிறது (ரோம. 5:5). ஒவ்வொரு விசுவாசியும், அவர் உணருகிறாரோ இல்லையோ, தேவ அன்பை அவருடைய வாழ்வில் பெற்றிருக்கிறார். தேவனுடைய அதே அன்பின் சுபாவத்தோடே நாமும் பிறந்திருக்கிறோம் (1 யோவா. 4:7). நம்முடைய வாழ்வில் தேவ அன்பைப் பெற்றிருக்கிறோமா இல்லையா என்பது கேள்வி அல்ல, நம்முடைய வாழ்வில் தேவ அன்பை வெளிப்படுத்தக் கற்றுக்கொண்டிருக்கிறோமா என்பதே கேள்வி.

நம்முடைய இருதயங்களில் உள்ள தேவ அன்பு, நம்முடைய உணர்ச்சிகளின் மூலம் அல்ல, நம்முடைய தீர்மானத்தின் மூலமே விடுவிக்கப்படுகிறது. நாம் அன்புகூருவதைப் போல் உணருகிறோமா இல்லையா என்பதின் அடிப்படையில் இது அமைந்தது அல்ல. மாறாக, தேவனுடைய வார்த்தை சொல்லுவதினால் நாம் அன்புகூரத் தெரிந்துகொள்கிறோம். இது மனித அனுபவத்தின் அடிப்படையிலல்ல, தேவ வார்த்தையின் அடிப்படையிலானது. ஈரோஸ் அன்பு, ஸ்டோர்ஜ் அன்பு மற்றும் ஃபிலியோ அன்பு எல்லாம் உணர்வுகளின் அடிப்படையில் உள்ளன. ஆனால், அகாப்பே அன்பு உதாரகுணமுள்ளதும், நாம் என்ன உணர்ந்தாலும் சூழ்நிலைகள் எதுவானாலும், அன்புகூரும் தீர்மானமும் ஆகும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இந்தவகை அன்பினால் மாத்திரமே, நம்முடைய எதிரிகளை மறுபடியும் திருப்பித் தாக்குவது இயற்கையானாலும், அவர்களிடத்தில் அன்புகூர நாம் தெரிந்து கொள்ள முடியும் (மத். 5:44) மனிதன் இன்னும் அறியாமலிருக்கும் அன்பின் வெளிப்பாட்டைக் கொண்டு வரவே இயேசு வந்தார். மனித குல உணர்வுகளின் எல்லைகளைத் தாண்டி செல்லக்கூடிய அன்பு; நட்பின் வட்டாரங்களையும் அது தாண்டிச் செல்லக்கூடியது, மனிதன் அறிந்துள்ள ஒவ்வொரு தடையையும் அது தாண்டக்கூடியது. ஒருவரை, தன் விரோதியினிடத்தில் அன்பு கூரவும், விரோதிக்காக மரிக்கவும் செய்யக்கூடிய அன்பு. நாம் எல்லாரும் இழந்துபோனவர் களாகவும், தேவனுக்கு சத்துருக்களாகவும் இருந்தோம் (ரோம. 5:10). எனினும் தேவன் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களுக்காக மரிக்க, தம்முடைய ஒரே பேரான குமாரனை அனுப்பினார் (ரோம. 5:8). இப்பொழுது நாம் இதே அன்பை இந்த உலகத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

நாம் மற்றவர்களிடத்தில் எவ்வளவு அதிகமாக அன்புகூருகிறோம் என்பதே, தேவன் மேல் உள்ள நம்முடைய உண்மையான அன்பிற்கு பரிட்சை ஆகும். ஒருவன் தான் தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன் என்று அப்போஸ்தலர் யோவான் கூறியிருக்கிறார் (1 யோவா. 4:20). தேவனோடு உள்ள நம்முடைய செங்குத்தான உறவின் உண்மையான அளவே, மனிதரோடு நமக்குள்ள கிடைமட்ட உறவாகும் என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். யாராவது ஒரு நபர் தனக்கு தேவனைத் தெரியும் என்று உரிமை பாராட்டினால், அவருக்கு கண்டிப்பாக தேவ அன்பைத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில், தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் உண்மையாக தேவனிடத்தில் அன்புகூறுவோமானால், நாம் மற்றவர் களிடத்தில் காண்பிக்கும் அன்பில் அது தெரியும். நாம் தவறான ஆவிக்குரிய காரியங்களினால் வஞ்சிக்கப்படாதிருப்போமாக.

தேவ வார்த்தையினால் வரும் தேவ அறிவினால், சமாதானத்தை அதிகரிக்கவும் பெருக வும் செய்யும் முடியும் (2 பேது. 1:2, 4). சமாதானம் அன்பினுடைய ஒரு குணாதிசயமாய் இருப்பதால், தேவ வார்த்தையை தியானிப்பதின் மூலம் நம்முடைய வாழ்வில் தேவ அன்பை அதிகரிக்கச் செய்ய முடியும். தேவ வார்த்தை, தேவனுடைய ஜீவனைப் பெற்றிருக்கிறது. தேவனுடைய வார்த்தை ஜீவனும், வல்லமை உள்ளதாயும் இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது (எபி. 4:12) ஜீவன் என்கிற வார்த்தை ஜோஎ '*Zoe*' என்கிற வார்த்தையில் இருந்து வருகிறது. அதற்கு தேவனுடைய ஜீவன் என்று அர்த்தமாகும். தேவனுடைய வார்த்தையை நாம் அதிகமாய் பெற்றுக்கொள்ளும்போது, நம்மில் கிரியை செய்கிற தேவனுடைய ஆவியையும் ஜீவனையும் பெரிய அளவில் நாம் பெற்றுக்கொள்கிறோம். நம்முடைய வாழ்வில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தேவனுடைய சுபாவமான, வெளிப்படுத் தப்பட்ட தேவனுடைய அன்பை மிகப்பெரிய அளவில் இது உருவாக்கும்.

தேவனுடைய அன்பை ஜெபத்தின் மூலமாக பெருக்கச் செய்யவும் முடியும். பரிசுத்த ஆவியானவர் அன்பின் ஆவியானவர் என்றும் அழைக்கப்படுகிறார் (2 தீமோ. 1:7). பரிசுத்த ஆவியானவராலே உள்ளான மனுஷனில் பலப்படவும், தேவனுடைய அன்பிலே வேரூன்றி நிலைப்பெற்றவர்களாயிருக்கவும், எபேசியர்களுக்காக பவுல் ஜெபித்தார் (எபே. 3:16, 17). எபேசியர்கள் ஏற்கனவே மறுபடியும் பிறந்தவர்கள், ஆனால் அவர்களுடைய வாழ்வில் தேவ அன்பை பெருக்கிக்கொள்ள முடியும். ஆவியானவருக்குள் ஜெபம்பண்ணுவது, நம்மைக் கட்டி எழுப்பவும், நம்மை தேவனுடைய அன்பிலே காத்துக்கொள்ளவும் செய்கிறது (யூதா 20, 21).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 5*

# அன்பின் எழுப்புதல்

பரிசுத்த ஆவியானவரின் கடைசிகால எழுப்புதலைப் பற்றி, பல தீர்க்க தரிசனங்கள் இருந்து வருகின்றன. இந்தக் கடைசிகால எழுப்புதலில், தேவ வார்த்தை மற்றும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை தேவ மனிதர்கள் குறிப்பிடுகிறார்கள். கடைசிகால எழுப்புதலில் நடக்க இருக்கும் அற்புத அடையாளங்களைக் குறித்தும் அதிகமான பேச்சு இருக்கிறது. இவைகள் எல்லாம் நல்லதும் சத்தியமானதுமாகும். ஆயினும், இந்த கடைசிகால எழுப்புதலின் இலக்கும் நோக்கமும், இயேசுகிறிஸ்துவினுடைய அன்பின் ஒன்றுபட்ட நிலைக்கு நம்மை கொண்டுவருவதாகும். திருச்சபை அன்பிலே பூரணப்பட வேண்டுமென்பதே இயேசுவினுடைய ஜெபமாயிருந்தது (யோவா. 17:23). யுகங்களின் கடைசி நிறைவேறுதலில், பிதாவிலும் இயேசுகிறிஸ்துவிலுமிருந்த அன்பு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சபையில் பூரணமா யிருக்கும் (யோவா. 17:26).

### *அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள எழுப்புதல்*

வல்லமையான அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் நடைபெற்றன. சில நேரங்களில் நாம் நடபடிகள் புஸ்தகத்தை வாசிக்கும்போது, தேவனுடைய அதிகமான மகிமையையும் வல்லமையையும் காண்பதால், அங்கு நடைபெற்ற அன்பின் எழுப்புதலை மறந்துவிடுகிறோம். நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள், அவைகளை விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தை அப்போஸ்தலர்களிடத்தில் கொண்டு வந்தபடியால், சபையில் இருந்த ஒருவருக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (அப். 3:34). அவைகள் எடுக்கப்பட்டு, தேவையுள்ள மக்களுக்கு பகிர்ந்துகொடுக்கப்பட்டது (அப். 4:35)). அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் உள்ள எழுப்புதலில், சுயநலம் என்னும் அடிமைத்தனம் முற்றிலும் உடைக்கப்பட்டது. மக்கள் எல்லாரும் ஒரேமனமும், ஒரே இருதயமும் உள்ளவர்களாயிருந்தனர். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை (அப். 4:32). இது அகாப்பே அன்பின் அற்புதமாகும்.

பஞ்சம் உண்டாகும் என்று தீர்க்கதரிசனம் உண்டானபோது, அவர்கள் காணிக்கை சேகரித்து பஞ்சத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ததே, அந்தியோகியா சபையின் இயற்கையான நல்ல பிரதி கிரியை ஆகும் (அப். 11:29). வெளிப்படையாக அன்பைக் காண்பிப்பது பொதுவான பழக்கமாயிருந்தது (கலா. 2:10; யாக். 1:27). பவுல் கொரிந்தியருக்கு கொடுத்த அறிவுரைகளில், தேவையுள்ளவர்களுக்கு பகிர்ந்துகொடுக்கும் படியாக காணிக்கை சேகரிக்க வேண்டும் என்ற கட்டளையையும் சேர்த்திருக்கிறார் (2 கொரி. 8:14). நாம் அன்பில்லாமல் கொடுக்க முடியும், ஆனால் கொடுக்காமல் அன்பு கூரமுடியாது. மற்றவர்களின் மிகப்பெரிய நன்மையை மாத்திரம் நாடி, உதார குணத்தோடு மற்றவர்களிடத்தில் காட்டப்படும் கரிசனையை அன்பு தேடுகிறது.

### *ஆவியானவரின் கடைசி அசைவாடுதல்*

பரிசுத்த ஆவியானவரின் கடைசி அசைவாடுதல், தேவ அன்பின் வல்லமையான அசைவாடுதலாகவும் இருக்கும். அற்புத அடையாளங்களில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப் படுவதும் இருக்கும். இதற்கு முன்பதாக உபவாசம் மற்றும் ஜெபத்தின் பெரிய அசைவாடுதல் இருக்கும். பழைய தலைமுறைகளின் எல்லா சால்வைகளும், ஒரே தலை முறையில் வெளிப்படுகிறதாய் இருக்கும். ஐந்துவகை ஊழியங்களும் நிறைவான பழைய சீர் நிலைக்கு திரும்பிவரும். ஊழியத்தில் அநேக புதிய காரியங்கள் வெளிப்படுத்தலில் இருக்கும். புதிய முறைகள் உருவாக்கப்படும், தேவ வார்த்தையைக் குறித்த புதிய வெளிப்பாடுகளும்,

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

புதிய வழியில் காரியங்களைச் செய்தலும் உண்டாகும். ஆயினும், இயேசு கிறிஸ்துவின் சபைகளிலிருந்து சுயநலம் முற்றிலுமாக நீக்கப்படுவது, மிகப்பெரிய பரவச மூட்டும் விளைவாக இருக்கும். யோவான் பதினேழாம் அதிகாரத்தில் உள்ள இயேசுவின் ஜெபத்திற்கான பதிலை, சபையானது வெளிப்படுத்தும். தேவனுடைய அன்பானது சபையில் வெளிப்படையாக காணப்படுவதால், நம்முடைய அன்பின் மூலம் நாம் தேவனுடையவர்கள் என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள்.

இயேசுகிறிஸ்துவின் மணவாட்டி தேவ அன்பினால் முழுவதும் நிறைந்திருப்பதின் மூலம், தேவ பிரசன்னத்தின் நிறைவினாலும் நிரப்பப்படும். தேவ அன்பின் ஆழம், அகலம், உயரம் இன்னதென்பதை நாம் அறிந்துகொள்வோம். கடைசியாக, தம்முடைய மக்களுக்கான முழு மையான தேவ அன்பை சபையானது விளங்கிக்கொள்ளும். அது இயேசுகிறிஸ்துவின் சபையில், பரலோகம் பூமியில் இருப்பதுபோல் இருக்கும். பரலோகத்தினுடைய சூழ்நிலை தேவ அன்போடகூட கசியும்.

*தேவ அன்பின் ஆழத்திற்கு வளருதல்*

அன்பை வெளிப்படுத்துவதில் மூன்று நிலைகள் இருக்கின்றன. அன்பின் முதல் நிலையில், நம்முடைய சொந்த குடும்ப அங்கத்தினர்களிடத்தில் அன்புகூரக் கற்றுக்கொள்ள வேண்டும். விசேஷமாக அவர்களுடைய கெட்ட காரியங்களை நாம் பார்க்கும்போது, நமக்கு மிக அருகில் இருப்பவர்களிடத்தில் அன்புகூருவது எளிதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தம்பதியினரிடையே உள்ள அன்பின் உறவில் மூன்று படிகள் இருக்கின்றன: ஒருவரில் ஒருவருக்கு உள்ள நல்ல காரியங்களைப் பார்த்து, ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுதல், ஒருவரில் ஒருவருக்கு உள்ள பலவீனமான காரியங்களைப் பார்த்து அவைகளுக்கு உறவில் இடமளிக்க முயற்சித்தல், நல்ல காரியங்கள் மற்றும் பலவீனமான காரியங்கள் இரண்டையும் பார்த்தும், இன்னும் அன்பின் உறவைத் தொடர தெரிந்து கொள்ளுதல். இந்த மூன்றாவது நிலையில்தான் உண்மையான அன்பு முன்னேறுகிறது. இரண்டாவது நிலையில், அதிகமாக ஒத்துப்போகாத நிலையும் தவறாக விளங்கிக்கொள்ளு தலும் உண்டாகிறது. நம்முடைய பெற்றோர்களானாலும், பிள்ளைகளானாலும், சகோதரர்களா னாலும், சகோதரிகளானாலும் அல்லது கணவன்கள் மனைவிகளானலும், நமக்கு அருகில் இருப்பவர்களை ஏற்றுக்கொள்ளவும் அன்புகூரவும், நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நம்முடைய குடும்ப அங்கத்தினர்களுக்கு வெளியே உள்ளவர்களோடு, அன்புகூர நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நட்புறவுகளை உருவாக்கவும், வேலை ஸ்தலத்திலானாலும், பள்ளியிலானாலும் அல்லது சபையிலானாலும், நண்பர்களானவர் களிடத்தில் தேவனுடைய அகாப்பே அன்பை பகிர்ந்து கொள்ளவும், கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய உறவில் ஞானமுள்ளவர்களாய் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கான நம்முடைய சாட்சியில், உத்தமத்தைக் காத்துக்கொள்ளுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, தேவ வார்த்தையில் ஸ்திரப்பட்ட பின்பு, நம்முடைய சத்துருக்களிடத்தில் அன்புகூரக் கற்றுக்கொள்ள வேண்டும். நமக்கு தீமைசெய்ய தேடுகிறவர்கள், நம்முடைய உதாரத்துவமான அன்பினால் பலனடைகிறார்கள். தேவ வார்த்தையில் ஸ்திரப்படுத்தப் படாமல் உபத்திரவப்படுத்தப்படும்போது, தேவ அன்பில் நடக்க நம்மால் இயலாது. பிரதிகூல மான நிலை வரும்போது, தேவ வார்த்தையே நமக்குத் தேவையான ஸ்திரத்தன்மையை நமக்குக் கொடுக்கிறது. இந்த நிலையில், தேவ அன்பின் கண்களோடு நாம் மக்களைக் காணக் கற்றுக்கொள்கிறோம். அவர்களுடைய செய்கைகளின்படி நாம் அவர்களை நியாயந் தீர்க்கமாட்டோம். மாறாக, அவர்களுடைய வாழ்விலிருந்து தேவன் கொண்டுவரக்கூடிய நன்மையை பார்த்துக்கொண்டிருப்போம். “பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்று தம்மை உபத்திரவப்படுத்தினவர் களுக்காக இயேசு ஜெபித்தார் (லூக். 23:34). மன்னிப்பது உணர்ச்சிகளின் அடிப்படையிலானது அல்ல. ஆனால், தெரிந்துகொள்ளுதலின் அடிப்படையிலேயே அமைகிறது. மக்கள் செய்யும் தீமைகளையும் தாண்டி, அவர்களின் வாழ்க்கையில் தேவன் வைத்திருக்கும் பலன் தரும் திறனைக் காண தெரிந்துகொள்வோம்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தேவனுடைய அன்பை நம்முடைய வாழ்க்கையில் உருவாக்க, இரண்டு பிரதான ஆரம்ப திறவுகோல்கள் இருக்கின்றன. முதலாவது தேவனுடைய வார்த்தையின் மீதான தியானம். அன்பைக் குறித்ததான வசனங்களை எடுத்து, அவைகள் நம்முடைய வாழ்வின் அங்கமாகும் வரை தியானிக்க வேண்டும். 'வேதவாக்கியங்களை தியானித்தல் தொகுப்பு 1' என்னும் சிறிய புத்தகத்தில் உதாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேதவாக்கியங்கள் நம்முடைய ஆவியில் வேர்கொள்ளும்போது, நம்முடைய வாழ்வில் தேவ அன்பு அதிகரிக் கிறது. நாம் அவரில் அன்பாயிருந்தால், அவருடைய வசனத்திலும் அன்பாயிருப்போம் என்று இயேசு கூறினார் (யோவா. 14:23). அப்பொழுது இயேசு தம்மை நமக்கு வெளிப்படுத்துவார். தேவ பிரசன்னத்தின் வெளிப்படுத்துதல், எப்போதும் தேவ அன்பின் வெளிப்படுத்துதலாகவே இருக்கும். இப்படியாக நாம் அவருடைய அன்பில் அதிகமாக வளருவோம்.

தேவ அன்பில் நடப்பதை ஆழமாக்க, அந்நியபாஷையில் ஜெபிப்பது இரண்டாவது திறவுகோலாகும். அந்நியபாஷையில் ஜெபிப்பது, நம்மை தேவனுடைய அன்பில் காத்துக் கொள்ளும் (1 கொரி. 14:14; யூதா 20, 21) கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு அந்நிய பாஷையில் ஜெபிக்கும் ஆற்றல் இருந்தாலும், அதை தங்கள் வீட்டில் உபயோகப்படுத்திக் கொள்ளாமல், பொதுவான இடங்களில் தவறாகப் பயன்படுத்தினார்கள். அந்நியபாஷையில் நாம் அதிகமாக ஜெபிக்க வேண்டும். ஏனெனில், ஆவி மனிதனின் வளர்ச்சிக்கு அது மிகமுக்கியமான திறவுகோல் ஆகும். அது ஆவிமனிதனை பலப்படுத்துகிறது. நாம் வேரூன்றி நிலைபெற்றிருக்கும் அன்பின் அளவின் நேர்விகிதத்தில் நம்முடைய உள்ளான மனிதனில் உள்ள பலம் இருக்கும் (எபே. 3:16).

அவருடைய வருகை சமீபமாயிருப்பதால், இயேசுகிறிஸ்துவின் சபையாகிய நாம், அவருடைய அன்பின் நிறைவை செயல்படுத்த தேவன் நமக்கு அருள்புரிவாராக. பரலோகத்தில் நாம் எல்லாரும் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, நாம் என்ன செய்தோம் அல்லது நாம் எவ்வளவு புகழ் பெற்றவர்கள் என்பதைப் பொறுத்து மாத்திரம் நாம் பலனைப் பெற்றுக் கொள்வதில்லை. இந்த பூமியில் நாம் அன்பினால் என்ன செய்தோம் என்பதைப் பொறுத்தே, நமக்கு பலன் கொடுக்கப்படும். சுயநலமான வேலைகள், அவருடைய பார்வையில் களிம்பை போல அழிந்துவிடும். தேவனுடைய பார்வையில் வெற்றி என்பது, தேவ அன்பில் நடப்பது எப்படி என்று கற்றுக்கொள்வதில் அடையும் வெற்றியாகும். தேவனுடைய தூய்மையான அன்பினால் செய்யப்பட்டவைகளுக்கு மட்டுமே பரலோகத்தில் பலனளிக்கப்படும். தேவனைப் பொறுத்தவரையில் மற்றவைகள் எல்லாமே வெறுமையான கிரியைகளே. ஆகவே, கிறிஸ்தவர்களுக்கு அன்பில் நடக்கக் கற்றுக்கொடுப்பது, நமக்கு அதிக முக்கியமானதும் அவசரமானதுமாகும். மற்றபடி, தேவ அன்பினால் உந்தப்பட்டு செய்யப்படாத அதிகமானவைகளை செய்தவர்களுக்கு, பரலோகத்தில் அதிகமான அதிர்ச்சிகள் இருக்கும். அன்பே பிரதானமானது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 